உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

## இருபத்தொன்பதாந்தொகுதி.

அன்பளிப்பு. திரு. சுப்பிரமணிய ஐயரவர்கள்

Vol. XXIX.

பிரமோதூத—பிரஜோத்பத்தி௵

1930–1931.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

# இருபத்தொன்பதாந்தொகுதியுள்ளுறை.


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
| --- | --- | --- |
| அண்டகோளவிருத்தி:- | பத்திராசிரியர். | க, அஎ |
| ஆரியர்—மிலேச்சர்:— | ஸ்ரீமத். ந. நாராயணன் B.A., B.L., L.T., M.R.A.S., (C.B.) | சநக |
| இயற்கையும் மனிதனும்:— | ,, P.N. அப்புஸ்வாமி ஐயர் B.A., B.L. | உஅரு |
| உம்முந்தாகுமிடனுமா ருண்டே:— | ,, P. S. வேதாசலேயர். | உஎசு |
| உலாக்கொண்ட மூன்று சோழ மன்னர்கள்:— | ,, T. V. சதாசிவபண்டாரத்தார் | சகரு |
| ஓர் ஐயம்:— | ,, ஆ. சுப்பிரமணியபிள்ளை. | கஅசு |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:- | ,, ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார். | கககூ, கநரு, உ0டு, உசுந, ச0எ. |
| கம்பராமாயணக் கௌஸ்துப மணிமாலை :— | ,, K. N. சிவராஜபிள்ளை. | நக, அக |
| கல்வெட்டுக்களால் அறியப்படும் சில தமிழ்ப்புலவர்கள்:- | ,, T. V. சதாசிவபண்டாரத்தார் | உகூக |
| கலீலவனூர்சரித்திரம்:- | ,, N. R. கிருஷ்ணமூர்த்திஐயர் M.A. | கருக, ககூக |
| கூத்தர் தெய்வப்பராணி யென்றது எதனை:— | ,, ரெ. அப்புவையங்கார் | நருந |
| சங்கநூல்களும் கம்பரும்:— | ,, பண்டித. ரா. திம்மப்பையர் | உகூஎ |
| சிறுபொழுதாராய்ச்சி:— | ,, பண்டித. சி. வீரபாகுப்பிள்ளை. | கருசு |
| சிறுபொழுதாராய்ச்சி:— | ,, சி. கணேசையர் | நககூ |
| தொல்காப்பியர் காலத்திற் குற்றமென்று பொருள்படுஞ்சொல் ஆனமா? மானமா? | ,, P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார், (M.A, Ph. D.,L.T.,) | கககூ |

நண்டும் வண்டும்:— ஸ்ரீமத். பண்டித. சித. நாராயணசாமியார். ௫௭
நரலோகவீரன் :— ,, S R பாலசுப்பிரமணியன் B.A, L.T. ௨௫௩
நன்னூலாராய்ச்சியுரை:— ,, P. S. வேதாசலையர் ௨௨௧
நன்னூற்சூத்திர விளக்கம். ,, பண்டித சித. நாராயணசாமியார். ௨௪௩
பரிசோதனத்தொடர்:— T. K. இராமாநுஜையங்கார் ௩௧௫, ௩௮௧
பாப்பாவினம்:— உதவிப்பத்திராசிரியர் ௨௩0
புறநானூற்றுக் குறிப்பு:— ஸ்ரீமத். P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார், M.A., Ph.D.L.T. ௨௫, ௧0௭, ௩0௭, ௪0௨
பெரியநாட்டு மடம் சாசனம் :— ,, சோமசுந்தரதேசிகர். ௧௪௫
மணவாளன் அல்லது பிடிவாதம்:— ,, K. C. வீரராகவையர் M.A., L.T. ௩௩, ௬௭
மதிப்புரை:— ௪௭, ௮௪, ௨௨௯, ௨௬0, ௩௬௫, ௪௨௯
மதுரைக்காஞ்சியுட் கூறிய யாமப்பிரிவு:— ஸ்ரீமத், சி. கணேசையர் ௩௭௫
வாணர்கள் :— ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர் ௩௮௭
வெண்பாமாலை யாராய்ச்சி :— ,, டி. என். அப்பனையங்கார். ௨௧, ௪௯, ௧௨௭, ௨௩௧

## இத்தொகுதியுள் அநுபந்தமாக வெளியிடப்பெற்றவை.

அண்ணாமலை பல்கலைக்கழக விளம்பரம்:—(ஆங்கிலம்) (பகுதி ௬)
ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— ஷை
தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— ஷை
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு:— (பகுதி—௨, ௩, ௫, ௧௧, ௧௨)
மதுரைத் தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள் :— (பகுதி—௬)

## இத்தொகுதியில் வெளிவந்து முற்றுப்பெற்ற நூல்கள்:—

I. அரும்பொருள்விளக்க நிகண்டு:— ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. (பகுதி. ௧—௫.)
II. மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்:— உதவிப்பத்திராசிரியர். (பகுதி. ௧௧, ௧௨)
III. பாப்பாவினம்:— உதவிப்பத்திராசிரியர். (பகுதி. ௮—௯, ௧௨.)

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-உகூ.] பிரமோதூதஹு கார்த்திகைமீ [பகுதி-க

Vol. XXIX. November-December 1930. No. 1.


## அண்டகோளவிருத்தி.

அண்டகோளப்பொருளேயாய்ந்துரைப்பன்மாறனடிப்
புண்டரீகப்பூப்புனைந்து

சென்ற புரட்டாசிமாதச் செந்தமிழ்ப்பகுதியில் 'ஓர்ஜயம்' என்ற பெயருடன் ஒருவிநப்புரை வெளியிடப்பட்டது.

அதில் 'அண்டகோளத்தாரணுவாகி' என்ற பாட்டைக் காட்டி அதன் வாலாறும், பொருளும் விளங்கவில்லை என்றும், அவற்றைப் பண்டிதர்களேனும் பத்திராசிரியரேனும் விளங்கச்செய்து, அப்பாட்டு இன்னநூலின்க ணுள்ளதென்பதும், இன்னாரால் பாடப்பட்ட தென்பதும் தெரிவிக்கவேண்டுமென்றும் கண்டிருக்கிறது.

அப்பாட்டுப் பன்முறை செந்தமிழில் வெளிவந்திருந்தும், வரலாறுகள் நன்குவிளங்காமையாலும், பாட்டின்பொருள் மிகவும் ஆழ்ந்தறிந்து விரிவாயெழுதி விளக்கவேண்டியநிலையில் அமைந்திருந்தமையாலும் இதுகாறும் காலம் தாழ்க்கப்பட்டது.

இப்பொழுது காலந்தாழ்க்கப்பட்ட செந்தமிழ்ப்பகுதிகளுக்கு வேண்டும் பொருளுரை போதாதிருப்பதை உத்தேசித்து இப்பாட்டின் பொருளை இடையிடையே சிறிதாராய்ந்துவந்ததில் ஒருவாறு பொருள் சிறிது புலப்படலாயிற்று.

இப்பாட்டு ஒருநூலின்கண்ணுள்ளதென்று எண்ணுதற்குரிய சான்றுகள் ஒன்றும் காணப்படாமையாலும், இப்பாட்டின் இறுதி அடிகள் புலவரைக்கருதிக் கூறப்பட்டிருத்தலாலும், 'ஆழ்வார் சங்கத்தார்க்கு அருளிச்செய்த அகவல்' என்று ஏட்டில் எழுதப்பட்டபடியே அது ஒரு முத்தகச்செய்யுளாயிருக்கவேண்டுமென்று தோன்றிற்று.

அப்பால் அப்பாட்டைப் பன்முறைபடித்துப் பொருள்நோக்கும் போது 'நவில்தொறும் நூல்நயம்போலும்' என்பதற்கு இலக்கியமாய், திருவாய்மொழிப்பொருள்களில் நோக்குடையதாய், மிகவும் ஆழ்ந்த சிறந்த பொருளுடையதாய் அப்பொருளுணர்தற்குரிய குறிப்புடையதாய்த் தெய்வப்புலமையானமைந்த செவ்வியபாடலாக விளங்கிற்று.

இந்நிலையில், செந்தமிழ் உதவிப்பத்திராதிபர், T. K. இராமாநுஜையங்கார் கூடற்புராணத்தின் கடவுள்வணக்கத்தில் 13-ம் பாட்டில் இப்பாட்டினை முதற்குறிப்பாற்கூறி, இது சடகோபராற்பாடப்பட்டதென்றும், இப்பாட்டால் தண்டமிழ்ச்சங்கத்தைச் சடகோபர் வென்றார் என்றும், இதன் வரலாறு சொல்லப்பட்டிருக்கிறதென்று தாம் தெரிந்து கொண்டிருந்ததை எனக்குத் தெரிவித்தார்.

அக்கூடற்புராணச்செய்யுள் வருமாறு:—

'அண்டகோளத்தாரென்னும்ஆரியத்தமிழாலன்று
தண்டமிழ்ச்சங்கம்வென்றசடகோபர்தாமேசிற்பங்
கண்டதோர்வடிவாற்பேசத்திரைப்புறத்திருந்திக்காலத்
துண்டெனப்பதின்மர்பாடல்உத்தரித்தவர்தாள்போற்றி;

என்று நாதமுனிகளுக்கு வணக்கங்கூறுமிடத்துள்ளது.

இப்பாட்டில், ஆரியத்தமிழ் ஒன்று தண்டமிழ் ஒன்று எனத் தமிழ் இருதிறத்தினதென்றும், அவை ஒன்றோடொன்று மாறுபடுவன வென்றும், பொருள்தோன்றுமாறு பாடியிருப்பது மிகவும் வியப்பை உண்டாக்கிற்று. பின்பு, ஆரியம் வடமொழியாதலால் வடமொழிநூற் பொருள்பற்றித்தோன்றிய தமிழ்ப்பாசுரங்களை ஆரியத்தமிழ் என்று கருதியிருக்கலாமென்று சிறிது சமாதானமடைந்தேன்.

பின்பு, 'உயர்ந்தோர்க்குரிய ஓத்தின் ஆன' என்ற தொல்காப்பியச் சூத்திரப்பொருள் (நச்சினார்க்கினியம்) நினைவில்வரவே, பண்டைக்காலர்

தொட்டே, வீடுபேறடையவிரும்பிய உயர்ந்த வேளாளரும் பிறரும் வேத நூற்பொருளை ஓதி உணர்ந்து ஒழுகி உய்யுமாறு அவ்வக்காலத்துப் பெரியாராற் செய்யப்பட்டுத் தொடர்ந்து வழங்கிவரும் தமிழ்நூல்கள் உண்மையால் அத்தகைய தமிழே ஆரியத்தமிழ் என வழங்கத்தகுமென் றறிந்தேன். இக்காலத்துவழங்கும் அத்தகையநூல்களுள் திருவாய் மொழி முதலிய ஆழ்வார்பாடல்களும் அமையும்.

ஆழ்வார்பாடல்கள் வேதத்தின் வழிப்பட்டன என்பதற்கு 'வேதம் தமிழ்செய்தமாறன்' என்றும் 'மிக்க வேதியர் வேதத்தி னுட்பொருள், நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான், தக்கசீர்ச் சடகோபன்' என் றும் "ஸஹஸ்ரஶாகோபநிஷத் ஸமாகமம்" என்றும் சொல்லப் பட்டனபோல் உள்ள பிரமாணங்கள் மிகப்பல காணப்படுகின்றன.

ஆதலால் சடகோபர் ஆரியத் தமிழால் வென்றார் என்றது வேத வழக்கொடு கூடியதாய், வீடுபேறு பயக்கும் திருவாய்மொழிப்பொருளை உட்கொண்ட பாசுரத்தால் வென்றார் என்று விளங்கலாயிற்று.

இதனால் தமிழ்மொழி இருவேறுவகைப்பட்ட தன்றென்றும், உறுதிப்பொருளில் உயர்ந்ததான வீடுபேற்றுக்குரிய தமிழ்நூல்வழக்கே ஆரியத்தமிழ் என்றும், அவ்வீடுபேற்றில், தண்ணியவாய அறம் பொருள் இன்பங்களை யுணர்த்தும் தமிழ்நூல்வழக்கே தண்டமிழ் என்றும் கருதி அப்பாட்டிற் கூறியிருப்பதாகக் கொள்ளவேண்டிய தாயிற்று.

இக்கருத்துக்கொண்டு கூடற்புராணத்திற்கண்ட, 'அண்டகோளத்தா ரெண்ணும் ஆரியத் தமிழாலன்று, தண்டமிழ்ச் சங்கம் வென்ற சட கோபர்' என்றதன் பொருளை உற்றுநோக்குகையில் ஆரியத்தமிழர்க் கும், தண்டமிழ்ப்புலவர்க்கும், புலனெறிவழக்கில், (காவ்யமர்யாதையில்; கவிமரபில்) விவாதமுண்டாயிருக்கலாமென்றும், அதனால், அவ்விரு திறத்தாரும் வாதுபுரியுமிடத்துச் சடகோபர், 'அண்டகோளத்தாரணு வாகி' என்னும் இப்பாட்டால் ஆரியத்தமிழ்வழக்கை ஆதரித்துப் பேசித் தண்டமிழ்ச்சங்கப்புலவரை வென்றிருக்கலாமென்றும் தோன் றிற்று.

சங்கத்தார்க்குள்ளே நிகழ்ந்த இதுபோன்றதொரு ஐதிகம் 'கொங்கு தேர்வாழ்க்கை' யென்ற பாசுரத்துக்கு உள்ளதாகவும் அறிகிறோம்.

திருக்குறள் அரங்கேற்றிய கதையும் வழங்குகிறது.

இடைக்காடர் ஊசிமுறியும் ஒன்றிருக்கிறது.

தலைக்குத்துத்தீர்வுசாத்தற்கு என்றதன் குறிப்பாலறியும் சரித்திரமுமொன்று.

'ஆரியம் நன்று தமிழ் தீதென மொழிந்த, காரியத்தாற் காலக் கோட்பட்டான்' என்ற சரித்திரமும், ஆரியம், தமிழ் என்ற இரு வேறு வழக்கால் மாறுபாடுண்டாயிருந்த தென்பதை நன்குவிளக்குகிறது. இவையெல்லாம் சங்கப்புலவர்கள் மற்றுமுள்ள தமிழ்ப்புலவர்களோடு ஓரோர் சந்தர்ப்பம்பற்றி மாறுபடுவதுண்டென்பதையுணர்த்துகின்றன.

தமிழாராயும் சங்கம் கூடியிருந்தால் அதில் தமிழ்வழக்குப்பற்றிய தடைவிடைகள் நிகழ்த லியல்பே; ஆதலால் அக்காலத்திற் சங்கப்புலவர்களுக்கும் பிற தமிழ்ப்புலவர்களுக்கும் தத்தம் புலமைத்திறமையை வலியுறுத்திக்கொள்ளும் முறையில் தம்முள் மாறுபாடிருத்தல் கூடுமென்று புலனாகின்றது.

அம்முறையானே ஆரியத்தமிழாகிய திவ்யப்ரபந்தங்களைத் தண்டமிழ்வல்லார் குற்றங்கூறி மாறுபட்டார் என்பது தோன்றுமாறு,

> 'அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
> மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும்
> தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாம்தெளியோம்
> மன்னும் வடநெறியே வேண்டினோம்'

என்னும் திருமங்கையாழ்வார்பாசுரமும் (பெரியதிருமடல்) குறிப்பால் வெளியிட்டிருக்கிறது.

இதனால் பெண்மடல் கூறலாகாது என்னும் மறுப்புண்டாயிருப்பதை அறிந்தே, பெண்மடல் கூறலாம் என்பதற்குச் சமாதானம்சொல்லியிருப்பதுபோல் தோன்றுகிறது; இதில் மன்னும் வடநெறியேவேண்டினோம் என்றதனால் இது ஆரியநூல்வழக்கு என்பதும் வெளியாயிற்று.

இதனுல் பெண்மடல்கூறலாகாதென்பது தண்டமிழ்வழக் கென்றும், வீடுபேறுகருதிய வேதவழக்காயுள்ள பேரின்பப்பாடல்களிற் பெண்மடல்கூறலாமென்பது ஆரியவழக்கென்றும் அக்காலக்கொள்கை என விளங்குவதாயிற்று.

திருவாய்மொழியிலும் சடகோபரால் பெண்மடல் கூறப்பட் டிருக்கிறது.

இதுவன்றியும், ஒருவனையே பாட்டுடைத்தலைவனுகவும் கிளவித் தலைமக (சிருங்காரநாயக) னுகவும் ஒரு பாட்டில் நாட்டிப் பாடலாகா தென்பது தமிழ்வழக்கு என்பர். ஆழ்வார்கள் எம்பெருமானைப் பாட் டுடைத்தலைவனுகவும் கிளவித்தலைமகனுகவும் கொண்டு பாடியிருக்கிறுர் கள்.

அன்றியும் திருவாய்மொழியில் பகவத்பக்தியைப்புலப்படுக்கும் துறைப்பாடல்களைக்கேட்ட சிலர், காமபுருஷார்த்தத்தைப் பேசுகின்றன வென்றும், காமுகவாக்கியமாயிருந்ததென்றும் குறைகூறிச்சென்றுர்கள் என்று திருவாய்மொழி ஈட்டால் தெரிகிறேம்.

இவற்றுல் முற்காலத்துத் தமிழ்ப்புலவர்கள் ஆழ்வார் அருளிச் செய்த திவ்யப்ரபந்த விஷயங்களில் மனம்பற்றுமல் வாதாடிவந்தார்க ளென்று தோன்றுகிறது.

பின்பு அவ்வாதங்களையெல்லாம் அடக்கித் திருவாய்மொழி வெற்றி பெற்று விளங்கலாயிற்று என்பதை, கம்பநாடர் பாடிய சடகோபரந்தாதி நன்கு விளக்குகின்றது. இதனை, சடகோபரந்தாதிப் பாட்டு 25ல்

'தொகையுளவாயபனுவற்கெல்லாந்துறைதோறுந்தொட்டாற்
பகையுளவாம்; மற்றும்பற்றுளவாம்; பழநான்மறையின்
வகையுளவாகியவாதுளவாம்; வந்தவந்திடத்தே
மிகையுளவாம்குருகூரெம்பிரான்றன்விழுத்தமிழ்க்கே'

என்றதனலறியலாம். இதனுள், 'துறைதோறும் தொட்டாற் பகையுள வாம்' என்றும், 'மற்றும் பற்றுளவாம்' என்றும், 'பழநான்மறையின் வகை

யுளவாகியவாதுளவாம்' என்றும், 'வந்தவந்திடத்தே மிகையுளவாம்' என்றும் கூறியுள்ள (இசைவேறுபாட்டால்) எதிர்மறுத்தல்கருதிய இகழ்ச்சிக் குறிப்பால்* அகப்பொருட்டுறையிலக்கணம் வழுவியதென்றும், 'காமப்பற்றுடையதென்றும், வேதவிரோதமுள்ளதென்றும், கூறியது கூற லுள்ளதென்றும் குருகூர் விழுத்தமிழைக் குறைகூறினோர்கூற்றெல்லாம் அறியாமையுடையவாயின என்று பொருள்படுதலால் அவ்வாதங்களெல்லாம் முன்பு இருந்தொழிந்தனவென விளங்குகின்றது.

பின்பு திருவாய்மொழி எல்லோராலும் போற்றப்பட்டதென்பதை, சிவப்பிரகாசப்பெருந்திரட்டு நூலாசிரியராலும், பரிமேலழகராலும் பிறசமய நூலுள்ளும், பொதுநூலுரையுள்ளும் அதன் பாசுரங்கள் பிரமாணமாக எடுத்தாளப்பட்டிருத்தலால் அறியலாம்.

அன்றியும் கம்பநாடர் தாம் பாடிய இராமாயணத்தின் அவையடக்கியலில்,

"முத்தமிழ்த்துறையின்முறைபோகிய
உத்தமக்கவிகட்கொன்றுணர்த்துவன்
பித்தர்சொன்னவும்பேதையர்சொன்னவும்
பத்தர்சொன்னவும்பன்னப்பெறுபவோ."

என்று தண்டமிழ்ப்புலவருக்குத் தனியே ஒரு அவையடக்கம் கூறிய அளவினமையாது,

"துறையடுத்தவிருத்தத்தொகைக்கவிக்
குறையடுத்தசெவிகளுக்கோதில்யாழ்
நறையடுத்தவசுணநன்மாச்செவிப்
பறையடுத்ததுபோலுமென்பாவரோ"

என்று மறித்தும் கூறிய இது, திவ்யப்ரபந்தங்களைக் கேட்ட செவியுடையாரைநோக்கியதென்பது தோன்றுமாறு, துறைப்பாட்டுக்களை

---

* 'உளவாம்' என்றது இசைவேறுபாட்டால் எதிர்மறுத்தல்கருதிய இகழ்ச்சிக்குறிப்புணர்த்திவருதலுண்டு என்பதனை, 'எடுத்தவுடல் தான் அன்றும்; ஆன்மாவென்றே இதனையல்லால் வேறுளதாம்; இதுபோய்ப்பின்னை, அடுத்த பரலோகத்தும் புசிப்பதுண்டாம்' என்னும் பிரபோதசந்திரோதயச் சாருவாக வாதக்கூற்றினுள்ளும் காண்க.

யுடைய திருவிருத்தம் முதலிய, விருத்தப்பாவாலாகிய தொகைநூல்களைக்கேட்ட செவியுடையார்க்கு என்று கூறியிருக்கிறார். இதனாலும், கம்பர் இராமாயணம் பாடுதற்குமுன்பே திவ்யப்ரபந்தங்கள் நன்கு மதிப்புப் பெறலாயினவென விளங்குகிறது. இவ்வாறாகத் திருவாய்மொழி வெற்றிபெற்று விளங்குதற்கு இடையே ஏதேனும் ஒருகாரணமிருக்கவேண்டும்; அது இவ்வண்டகோளப்பாசுரத்தின் ஐதிகமாயிருக்கலா மென்று கொள்ளுதற்கு இடந்தருகிறது.

அன்றியும் சடகோபரந்தாதி 48-ம் செய்யுளில், 'சங்கக் குவடிறக் குத்திய மாறப்பெயர்க் கொலையானை' என்ற தொடரால் ஆழ்வார் சங்கத்தாரை வென்ற விருத்தாந்தத்தைக் கம்பரே கூறியிருப்பதால், அவர் காலத்துக்குமுற்பட்டே இந்த விருத்தாந்தம் பிராமாணிகர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரஸித்தியுடையதாயிருந்ததென்று தெரிகிறது.

சடகோபரந்தாதியின் ஆழ்ந்தபொருள்களும் கவித்திறமையும், இராமாயணம்பாடிய கம்பர்பாடியதென்பதைப் புலப்படுத்தற்குரியன.

அன்றியும், அது தொன்றுதொட்டுத் திருக்குருகூரில் ஆழ்வார் ஸந்நிதியில், ஜ்ஞானசீல வ்ருத்தர்களாயும் ப்ராமாணிகர்களாயுமுள்ளார்கள் கோஷ்டியில் அரையரால் சேவிக்கப்பட்டுவருதலால் அதைப் பிரமாணமாகாதென்று சொல்லுதற்கிடமில்லை.

1 இனி, ஆழ்வார் சங்கத்தார்க்கு அருளியதாகக்காட்டும், அப்பாட்டை நோக்குகையில், வைதிகத்தில் ஏதேனும் ஒரு சமயப்பற்றுத் தோன்றாமல், பொதுப்பட விஷயங்களைச் சொல்லிச் செல்லும் முறையால் திருவாய்மொழியின் முதற்றிருவாய்மொழியை ஒத்திருக்கிறது.

2 சொல்லளவில் எல்லாச்சொல்லும் செவிக்கினிய செஞ்சொல்லாகத்தொடுக்கப்பட்டிருக்கும் செய்யுள்நடை திருவாய்மொழிச்செய்யுணடையை ஒத்திருக்கிறது.

3 அதிகாரிகளான சாமானியஜனங்களுக்கு சொற்பொருள் விளங்கினாலும் நுவல்பொருள் விளங்காதாகவும், ரஹஸ்யார்த்தங்களை அறிதற்குரிய தத்துவவித்துக்களான சாஸ்த்ரஜ்ஞர்களுக்குச் சொல்லக்கருதியபொருள் எளிதில் விளங்கும்படியாகவும், அமைந்திருக்கும் வாக்யநடையானது,

'செத்தத்தின்வயிற்றிற் சிறியது பிறந்தால்,
எத்தைத்தின் றெங்கே கிடக்கும் ?'
'அத்தைத்தின் றங்கே கிடக்கும்'

என்று மதுரகவியாழ்வாரும், ஆழ்வாரும் வழங்கிய வாக்கியநடையை ஒத்திருக்கிறது.

4 'சிறுவரைப் பயந்தனள்' என்ற தொடர், 'சிறியது பிறந் தால்' என்றதோ டொன்றுயிருக்கிறது.

5 'அவளிவளுவள்' என்ற சொற்றொடர் ந'மவளிவளுவள்' திருவாய்மொழி (க-க-ச) என்றதை முழுதும் ஒத்திருக்கிறது.

6 'பேரெழில் ஒருமை' என்றது, 'நலனுடை ஒருவன்' (திரு வாய்மொழி க-க-௩) என்பதை ஒத்திருக்கிறது.

7 'தன்னிலை யறியா' என்பது 'இறைநிலை உணர்வரிது' (திருவாய்மொழி, க-௩-ரு) என்பதை ஒத்திருக்கிறது.

8 'ஒண்சுவை தருவது' என்பது 'ஒருகதி இன்சுவை தந்திட்டு' (திருவாய்மொழி க-கூ-௩) என்பதை ஒத்திருக்கிறது.

9 'நிரைபொழிற் குப்பை தருகட்டு' என்பது 'குப்பைகிளர்ந் தன்னசெல்வம்' (திருவாய்மொழி ௩-கூ-ரு) என்பதைப் பொருளால் ஒத்திருக்கிறது.

10 'தலையிலி' என்பது மிகுநரை இலனே (திருவாய்மொழி க-க-௨) என்பதை ஒத்திருக்கிறது.

11 ஒருமொழியுள் — பொழில், எழில், மா, கடல், மணல், நிலை, மகள், புலவர், சுவை, அவன், இவள், முதலிய பலசொற்களும் திருவாய்மொழியுள் வழங்கப்பட்டன.

12 திருவாய்மொழியுள் வழங்கப்படாத கடிய திரிசொல் ஒன்றே னும் இப்பாட்டின்கணில்லை.

இப்பாட்டுள், நுண்மரபாயுள்ள இலக்கணங்களுள், நாற்பொருட் பயனும் சொல்லப்பட்டுள்ளன.

மதங்களுள் உடன்படல், மறுத்தல், பிறர்தம்மதம்மேற்கொண்டு களைதல், தாஅனுட்டித் தனது நிறுவுதல், இருவர்மாறுகோளொருதலை துணிதல், பிறனூற்குற்றங்காட்டல், பிறிதொடுபடாஅன் தன்மதம் கொளல் என்னும் எழுவகைமதமும் அமைந்துள்ளன.

அழகினுள் சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க் கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின்வைப்பு, உலகமலையாமை, விழுமியதுபயத்தல், விளங்குதா ரணத்ததாதல் என்னும் பத்தழகும் அமைந்துள்ளன.

உத்திகளுள் ஒத்துமுறைவைப்பு, தொகுத்துச்சுட்டல், வகுத்துக் காட்டல், முடிவிடங்கூறல், தானெடுத்துமொழிதல், பிறன்கோட்கூறல், சொற்பொருள்விரித்தல், தொடர்ச்சொற்புணர்த்தல், இரட்டுறமொழிதல், ஏதுவின்முடித்தல், ஒப்பினமுடித்தல், மாட்டெறிந்தொழுகல், எதிரது போற்றல், பின்னதுநிறுத்தல், ஒருதலைதுணிதல், எடுத்துக்காட்டல், விகற்பத்தின்முடித்தல், முடிந்ததுமுடித்தல், இன்னதல்லதிதுவென மொழிதல், முன்மொழிந்துகோடல் உய்த்துணரவைத்தல் என்னும் இவ்விருபதின்மேலுள்ள உத்திகள் அமைந்துள்ளன.

கவிமரபுகளுள் சொற்குறிப்பு, பொருட்குறிப்பு, சொற்பொருட் குறிப்பு, தொகைக்குறிப்பு, குறிப்பிற்குறிப்பு முதலிய பலகுறிப்புக்க ளும், உவமை, உருவகம், சொல்முரண், பொருள்முரண், நிரனிறை, சிலேடை முதலிய பலஅணிகளும், தந்த்ரோக்தி, சாடூக்தி, கூடோக்தி, விஷமோக்தி, லோகோக்தி, விநோதோக்திகளாகிய சாதுர்யோக்திகளும், ஸ்வாபதேசம, அந்யாபதேசம் என்னும் அர்த்தவிசேஷங்களும் அமைந்து விளங்குகின்றன.

இவையெல்லாம் பொருளுணர்ந்தபின்பே விளங்கத்தக்கனவாதலால் அவை பின்னர் விளக்கப்படும்.

இப்பாட்டு நீண்டகாலமாக உரையெழுதப்படாத மூத்தகச்செய்யு ளாகவே ஏடுகளில் எழுதப்பட்டுவந்திருப்பதால் எழுதுவோரால் நேர்ந்த சில எழுத்துப்பிழை புகுந்திருப்பதாகத் தெரிகிறது. அவை 'ஆருயிர்' என்பது 'ஆசியர்' என்றும், 'பாப்பில்' என்பது 'பாப்பி' என்றும், 'பெருமா' என்பது 'பெருமரம்' என்றும், 'டொன்று' என்பது பொன்று, என்றும், 'கொட்' என்பது 'கோட்' என்றும் உள்ளனவாம்.

## இப்பாட்டால் நுவலப்படும்பொருள்.

உபயவேதாந்தபாரங்கதர்களால் அறிதற்குரிய வேதவழக்காயுள்ள பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதிகளும், தத்வஹிதபுருஷார்த்தங்களும், புருஷார்த்தங்களை அடைதற்குரிய உபாயங்களும், புருஷார்த்தவிசேஷங்களும், அவற்றின் ப்ரகாரங்களும், அவைபற்றிப்பாடிய ஆரியத்தமிழ்ப்புலனெறிவழக்கங்களும், அவை தண்டமிழ்ப்பாடல்களின் புலனெறி வழக்கோடொவ்வாமைக்குரிய காரணங்களும், அவைபற்றிய ஸ்வபக்ஷ பரபக்ஷ வ்யவஹாரங்களும், அவற்றுள் ஒருதலை துணியப்பணித்தலும் உள்ளனவாம்,

## பாட்டின் பொருட்டொடர்நிலை.

இப்பாட்டுக்குப் பகவத்பக்தி விஷயமாகையாலே, அந்த பக்திக்கு விஷயமான பகவத்ஸ்வரூபரூபகுணங்களைச் சொல்லத்தொடங்கி, ஜகத்காரணத்வம்தோன்ற முதலிரண்டடிகளால் ப்ரக்ருதியின் ஸ்தூலரூபமான மஹதாதி தத்வசிருஷ்டியும், மூன்றுமடியால் அம்மஹதாதிதத்வங்களின் காரியரூபமான பிரபஞ்சசிருஷ்டியும் கூறப்பட்டுள்ளன. அவ்வடிகளுள்ளேயே பகவத்ஸ்வரூபரூபகுணங்களும் உடனிலையாயமையுமாறு கூறப்பட்டன. இன்னும் அவ்வடிகளுள்ளேயே, சித், அசித், ஈசுவரரூபமான தத்வத்ரயங்களும் அடங்கியுள்ளன.

இவ்வாறாக 'தத்ஸ்ருஷ்ட்வா' என்கிறபடியே ஜகத்ஸிருஷ்டிக்ரமம் சொல்லி, 4, 5, 6 அடிகளால் 'ததநுப்ரவிச்ய' என்கிறபடியே ஜீவாத்மாக்களில் அநுப்ரவேசித்துப் பலப்ரதானம் செய்ய அப்பரம்பொருள் இருக்கும் இருப்பின்படிசொல்லி, 7 ஆம் அடியால் பலப்ராப்திக்குரிய உபாயங்களும், அவற்றுக்குரிய பலங்களும் சொல்லி, 8 முதல் 12 வரையுள்ள அடிகளால் அப்பலங்கள் இருக்கும் ப்ரகாரம்சொல்லி, 12 ம் அடியால் பலப்ரதாதாவான பாட்டுடைத்தலைவன், அப்பாடற்குரிய கிளவித்தலைமகன் இவர்களது இயல்புகூறி, 13ம் அடியின் முற்பாதியால் பாட்டுடைத்தலைவனும், கிளவித்தலைமகனும்

ஒருவனேயாதற்கு ஏதுக்கூறி, அவ்வடியின் பிற்பாதிதொடங்கி, 'பயந்தனள்' என்னுமளவும் ஆரியத்தமிழ்த்தலைமகளது இயல்புகூறி, அவள் தண்டமிழ்த்தலைமகளின் வேறுபடுதல்காட்டி, தண்டமிழ்த்தலைமகள் இன்னளல்லள் என்பது குறிப்பாற்கொள்ளுமாறு ஸ்வபக்ஷ பரபக்ஷ வ்யவஹாரங்களை நிரூபித்து, 16, 17 அடிகளால் இவ்விருவகைவழக்கினுள் கொள்ளத்தக்கது இதுவென்று புலவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று முடிவுகூறியிருக்கிறது.

இனி அப்பாட்டு வருமாறு:—

அண்டகோளத்தாணுவாகிப்
பிண்டம்பூத்தபேரெழில்ஒருமை
ஈருயிர்மருங்கின் ஆருயிர்தொகுத்து
நித்திலத்தன்னவெண்மணற்பரப்பில்
வேரும்வித்துமின்றித்தானே
தன்னிலையறியாத்தொன்மிகுபெருமா
மூவழிமுப்பழமுறைமுறைதருதலின்
ஒன்றுண்டொண்சுவைதருவதுமற்றது
கல்லிலெழுந்துகடலிலழுந்தி
அறுகாற்குறவன்ரீறவிளைக்கும்
நிரைபொழிற்குப்பைதருகட்டொன்றுவித்
தறுகொட்டாமாவிளைக்குநாடன்
அவனேதலையிலியவன்மகள்முலையிலி
தானுமீனுள்ஈனவும்படாஅள்
எழுவர்மூவர்சிறுவரைப்பயந்தனள்
அவளிவளுவளென்றறிதல்
அவளறுகாட்சிப்புலவரதுகடனே." என்பது.

பொழிப்புரை வருமாறு:—

அண்டகோளங்களின் அறிதற்கரிய நுண்பொருளாயிருந்து (அதனைப்) பிண்டமாகத் தோற்றுவித்த பெருமையும் எழிலும் வாய்ந்த

ஒருபொருள், ப்ரக்ருதியின்கண்ணே (போகம்) நுகர்தற்குரியன வாய்க்கிடந்த உயிர்களை (அப்போகம் நுகர்தற்குரிய தநுகரண புவனங்களுடன்) கூட்டி முத்துப்போலே சுபாவ சுத்தமாயும் மணல்போலே அநந்தமாயும் உள்ள அவ்வுயிர்த்தொகுதிக்ளில் யாதொரு பற்றுதலும் காரணமுமில்லாமலே உள்ளுறைந்து நிற்கும் தன்னிலையை ஒருவராலும் அறியமுடியாத தொன்மையும் பெருமையும் உடைய மகிமைபொருந்தியதாய்நின்று (அவ்வுயிர்களுக்கு) மூன்றுநெறியின்வாயிலாக மூன்று பயன்களை வேதத்திற் சொல்லிய கிரமமாகத் தருமிடத்து, ஒரு பயன் குற்றமற்ற சுவையுடையதாயிருக்கும்; மற்றொருபயன் மலைபோலுயர்ந்தும், கடல்போலிழிந்தும் (ஏற்றிழிவுடையதாய்) ஆறுகால்களையுடைய குறவனால் நீரில்லாமல் விளைவிக்கப்படுகின்ற வரிசையான பொழிற்றொகுதி தருகின்ற கள்ளையுடையதாயிருக்கும்; மற்றொன்று விதையற்ற கொட்டையாயிருக்கும்; அப்படிப்பட்ட (பெரு) மா, பலனளிக்கும் சிறப்புவாய்ந்த நாட்டையுடையோன் (பாட்டுடைத் தலைவனும் கிளவித்தலைமகனுமான) நாடன் என்று சொல்லப்பட்டவனானவன்; அவனுக்குமேல் ஒரு தலைவனில்லாதிருத்தல் அதற்கு ஏது; (அவனால் பிறப்பிக்கப்பட்டும், அறிவுகொளுத்தப்பட்டும் அவன் வழிப்பட்டொழுகுதலுடைமையால்) மகளாயுள்ளாள் (பேரன்பும் பேரின்பமும் உடைமையால்) காதலியுமானாள்; (அவள் சிற்றின்பத் தலைமகள்போல) முலை முதலிய பெண்ணுறுப்பில்லாதவள்; (அவள் கலவியின்பந் துய்த்தலால்) மகப்பெறுமவளல்லள்; (பிறளொருத்தி வயிற்றிற் பிறந்தவளுமல்லள்; பத்துப்பிள்ளைப் பெற்றாள்; அவள் இத்தன்மையுடையளாதலாற் சிற்றின்பப்பாடற் புலனெறிவழக்க மெய்தற்குரிய ளல்லாத பிறள் என்று தெரிந்துகொள்ளுதல் சிறந்த இயற்கையறிவோடுகூடிய நூலறிவுடையோர் கடன் என்றவாறு.

இனி, இதன் விரிவுரை வருமாறு:—

"அண்டகோளத்து ஆர் அணுவாகி" என்றது ஸம்ஹாரகாலத்தில் அண்டகோளங்களின் அரிதற்கு அரிய அணுமயமான ஸூக்ஷ்மரூபியாய் நின்று என்றவாறு.

அணுவாகி என்ற ஆக்கத்தால் ஸம்ஹாரகாலத்தில் என்பது பெறப்பட்டது.

விட்டுநீங்காத ஒற்றுமைநயத்தால் அணுவாகிய அண்டத்தின் ஆக்கம் ஒருமைப்பொருள்மேலும் ஏறிநின்றது; இதனால் அவ்வொருமைப்பொருட்கு ஜகதுபாதாநகாரணத்வம் ஸூசிதம்.

“பிண்டம் பூத்த பேர் எழில் ஒருமை” என்றது ஸூக்ஷ்ம ரூபமாயிருந்த அவ்வண்டத்தை ஸ்ருஷ்டிகாலத்தில் ஸ்தூல ரூபமாகப் பரிணமிப்பித்த பெருமையும், எழிலும் வாய்ந்த ஒரு (பரம்) பொருள் என்றவாறு.

பிண்டம் பூத்த என்றதன் குறிப்பால் ஸ்ருஷ்டிகாலத்தில் என்பது பெறப்பட்டது. பிண்டம்—ஸ்தூலவடிவம். பூத்தல் தோன்றுதலும்; தோற்றுவித்தலும் ஆம். தோன்றுதற் பொருளில், பிண்டமாகப் பூத்த எனக. இங்கு பூத்த என்பது பூ பூத்தது என்புழிப்போலச் செயப்படு பொருள்குன்றியவினையாய்நின்றது. இப்பொருள் ஜகதுபாதாந காரண பரமாயிற்று.

இனித் தோற்றுவித்தற்பொருளில் மரம் பூப் பூத்தது என்புழிப் போலச் செயப்படுபொருள்குன்றாதவினையாய்நின்றதெனக் கொள்க. இதற்கு அவ்வணு செயப்படுபொருள். இது ஜகந்நிமித்தகாரணபா மான பொருள். இங்ஙனம் ஒருதொடரின் இருபொரு ளொருங்கமை யக்கூறிய இது தந்திரோச்சாரணம். பரம்பொருள் ஒன்றாய்நின்றே உலகிற்கு இருவகைக்காரணமுமாயும் அமைந்திருப்பதுபோல, பிண்டம் பூத்த என்னும் ஒருதொடர்நின்றே அவ்விருவகைப்பொருளையும் ஒருங்குணர்த்திநிற்பது ஒரு வியப்பு.

பகவத்காமமாகிற பக்தி இப்பாட்டுக்கு முக்யார்த்தமாகையாலே, அந்த பக்திரூபமான ஞானத்திற்கு விஷயமாகக் கொள்ளத்தக்க பகவத்ஸ்வரூபத்தை, ‘காரணந்து த்யேய:’ என்று ஜகத்காரணரூபமாக, வேதம் சொல்லியபடியே இங்கு நிரூபித்திருக்கிறது. உபாதானகாரணத் தன்மைமாத்திரம் கூறில், பிரகிருதியில் அதிவ்யாப்தியாம், அதனை நீக்குதற்கு நிமித்தகாரணத்துவம் கூறப்பட்டது. நிமித்தகாரணத்துவம் மாத்திரம் கூறின் ப்ருஹ்மா முதலான ஸத்வாரக கர்த்தாக்களில் அதிவ்யாப்தியாகும், அதனை நீக்குதற்கு உபாதாநகாரணத்துவம் கூறப்பட்டது.

'பேரெழில்ஒருமை' என்பதில் பெருமையும் எழிலும் தனித்தனி ஒருமை என்பதைக்கொண்டு முடியும். அவ்வொருமைக்குரிய பெருமையாவது அப்பிண்டமாகப்பூத்த பிரகிருதிமண்டலமுழுதும் வியாபித்து அதனைத் தன்னகப்படுத்தி இருத்தல்; எழில் - அழகு*. இது சௌந்தரிய முதலான ஸமஸ்த கல்யாணகுணங்களுக்கும் உபலக்ஷணம். ஒருமை - ஒப்புயர்வற்றபொருள்.

அண்டகோளத்தணுவாகிப் பிண்டம் பூத்த ஒருமை என இயையும். இது 'உடல் மெலிந்து பருத்த உயிர்' என்பதுபோல உலகிற்கும் பரம்பொருட்கும் ஒற்றுமையும், வேற்றுமையும் ஒருங்குதோன்றக்கூறிய வாறு. இதற்கு 'உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன்' என்ற திருவாய்மொழியில் நோக்கு.

இதனால் ஜகத்துக்கு அபிந்நநிமித்தோபாதானகாரணமாய், ஸர்வவ்யாபகமாய், ஸமஸ்த கல்யாண குணவிசிஷ்டமாய், உலகிற்கு உயிராய் அத்விதீயமாயுள்ளது என்ற லக்ஷணங்களால் பகவத்ஸ்வரூபரூபகுணங்கள் ஏற்றபெற்றி சொல்லப்பட்டன.

பிண்டம்பூத்த 'ஒன்று' அல்லது 'ஒருவன்' என்னாது 'ஒருமை' என்றது என்னெனில், ஒன்று என்று அஃறிணைச்சொல்லாற்கூறின் அப்பிண்டத்தின்வேறாகாத பிரகிருதியைக் கூறியதாகும்; இது மஹதாதிதத்துவசிருஷ்டிநிலையாதலால் ஒருவன் என்று கூறுதற்கும் உருவமில்லை; ஆதலால் அப்பிரகிருதியைப்பற்றி அதன் பண்புபோல் உயிராய்நிற்பது என்னும் பொருண்மைதோன்றுமாறு 'ஒருமை' எனப்பட்டது என்க.

அன்றியும் இலக்கணநூலார் திணைப்பகுப்புச்செய்யுங்காலத்தே தெய்வப்பொருட்கேற்றதொரு திணை தனியே வகுத்துக்கொள்ளாமையால் தொல்காப்பியனர், 'தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக்கிளவி......இவ்வெனவறியுமந்தந்தமக் கிலவே' யென்று இடர்ப்பட்டு, வேறுகெதியில்லாமையால் 'உயர்திணைமருங்கில்........இசைக்கும்' என்று ஒருபோக்குக் காட்டிச்சென்று, 'காலமுலகம்' என்ற சூத்திரத்தாலும் வழூவமைப்பர்.

---

* அழகு - எது எப்படி இருப்பது நலமோ அப்படியிருத்தல். இதனை, 'கண்ணேட்டமென்னுங் கழிபெருங் காரிகை' என்பதனுன் அறிக.

ஆழ்வாரும், 'ஆணல்லன் பெண்ணல்லன் ........கோணைபெரிதுடைத் தெம்பெம்மானைக்கூறுதலே' என்று திணைபால்பற்றிப்பேசுதற்கு இடர்ப் பாடு காட்டினார். இத்தன்மையான அநிர்வசநீயப்பொருள் என்பது தோன்ற உயர்திணையுமாகாது, அஃறிணையுமாகாது இருதிணைக்கும் பொதுவாய்நிற்கும் பொருண்மைத்தன்மைதோன்ற ஒருமை எனப்பட்ட தென்க.

இவ்வாறு கீழ் மஹதாதி தத்துவசிருஷ்டியை நிரூபித்து, மேல் பிரபஞ்சசிருஷ்டியை நிரூபிக்கிறது 'ஈருயிர் மருங்கின் ஆருயிர் தொகுத்து' என்று.

இங்கு ஈருயிர் என்றது பிரகிருதியை; என்னை? 'ஜ்ஜயொ நிஜ-ஹஜ ஸ்ரஹ தஸிநு ஗ஹஂ ஓயாஜூஹஂ' என்கிறபடியே அப்பரம்பொருளால் ஜீவாத்மாக்கள் பிரகிருதியுள் கெர்ப்பமாகவைக்கப்பட்டிருத்தலால் அந்தக் கெர்ப்பத்தையுடைய பிரகிருதி ஈருயிர் எனப்பட்டது. கெர்ப்பிணியை ஈருயிர் என்பது உலகவழக்கு. அன்றியும், ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் பிரகிருதி சரீரமாயிருத்தலால் அது ஈருயிர் எனப்பட்டது என்க. ஈருயிர் என்றது இரண்டு உயிர்களை உடையது எனப் பண்புத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைப்பெயராய்ப் பிரகிருதியை யுணர்த்திநின்றது. இதனால், ஈருயிர்மருங்கின் என்றது பரமாத்மா, ஜீவாத்மா என்னும் இரண்டு உயிர்ப்பொருள்களுக்கு உடலாயுள்ள ஸ்தூலப்பிரகிருதியின்கணுள்ள என்ற பொருள்பயந்துநின்றது. ஈருயிர் என்றது - ஏதுப்பெயர்.

'ஆருயிர்தொகுத்து' என்றது போகம் நுகர்தற்குரிய ஜீவாத்மாக்களைத் தநுகரணபுவனங்களுடன்கூட்டி என்றவாறு. இது, உணவின்மையான் அயர்ந்துறங்குவாரையெழுப்பி உண்பிப்பதுபோல்வதொரு கருணை காரியம். இங்கு ஆர்தல் நுகர்தலாதலால் அந்நுகர்ச்சிக்குரிய போகம் என்னும் செயப்படுபொருள் வருவித்துரைக்கப்பட்டது. தொகுத்தல்-கூட்டல்; அது ஏதனுடன் என்னும் உடனிகழ்பொருளை அவாவி

நிற்றலால், அப்போகநிகழ்தற்குரிய சாதநங்களான தநுகரணபுவனங்கள் வருவித்துரைக்கப்பட்டன.

இதனளவும் ஜகத்ஸ்ருஷ்டிக்கு நிமித்தோபாதாநகாரணம் பரம்பொருள் என அப்பரம்பொருளின் தலைமைதோன்றக்கூறியகூற்றானே பகவத் ஸ்வரூபரூபகுணங்களும் அமையக்கூறி, பிரகிருதியும் ஜீவனும் அப்பரம்பொருளின் அதீனம் எனக் காட்டினமையால் சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் தத்துவத்திரயத்தின் ஸ்வரூபநிரூபணமூம் உடன் அமையக்கூறியவாறாயிற்று.

இவ்வாறு தத்வநிரூபணம்பண்ணி, மேல் ஹிதநிரூபணம்பண்ணத்தொடங்கி, சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களுக்குத் தோன்றாத்துணையாய் உள்ளேநின்று போகமளித்தற்பொருட்டு அப்பரம்பொருளின் அநுப்பிரவேசம் சொல்லுகிறது, 'நித்திலத்தன்ன வெண்மணற் பரப்பில்' என்று தொடங்கி.

நித்திலத்தன்ன வெண்மணற் பரப்பில் என்றது முத்துப்போல ஸ்வபாவ சுத்தமாயும், அநுபாவ்யமாயும், வெண்மணல்போல் க்ரீடாஸ்தானமாயும் அனந்தமாயும் அணுவாயுமுள்ள ஜீவாத்தும ஸமூஹத்தின் அகத்தே என்றவாறு.

மணல் என்றது ஸாதிருசியலக்ஷணையால் ஜீவாத்மபரமாயிற்று. நித்திலத்தன்ன என்ற உவமை மணலுக்கு அடையாகாது அம்மணலின் சாதிருசியலக்ஷணையாலுணர்த்தப்பட்ட ஜீவாத்மாக்களுக்கு அடையாயிற்று.

நித்திலம் சிப்பியின் ஊனகத்துள்ளதாயினும் அது அவ்வூனின் விஜாதீயமாய், ஸ்வபாவசுத்தமாய், அநுபாவ்யமாயிருப்பதுபோலே ஜீவாத்மாவும் உடலின் ஊனகத்துள்ளதாயினும் அது அவ்வுடற்பொருளாகிய பிரகிருதியின் விஜாதீயமாய், ஸ்வபாவசுத்தமாய், பரமாத்மாவுக்கு அநுபாவ்யமாயிருத்தலால் அதற்கு அந்நித்திலம் உவமையாயிற்று.

வெண்மணல், தலைவர்க்குக் கிரீடாஸ்தானமாயும், அனந்தமாயும் அணுவாயுமிருப்பதுபோல், ஜீவாத்மாக்களும் பரமாத்மாவுக்குக் கிரீடாஸ்தானமாயும் அனந்தமாயும் அணுவாயுமிருத்தலால் அவ்வெண்மணல்

ஜீவாத்மாவுக்கு உவமையாயிற்று. பகவானுக்கு வாஸஸ்தானமாகச் சொல்லப்பட்ட 'ஸூக்ஷ்மாணிவியஸஜ வெஸகவெத' என்ற வடமொழிப் பொருளே 'நித்திலத்தன்னவெண்மணற்பரப்பில்' எனப்பட்டமையானும், ஜீவபாஹுள்யத்துக்கு, 'நுண்மணலெக்கரிற்பலர்' என்று திருவாய்மொழியில் மணற்பரப்பு உவமிக்கப்பட்டமையாலும், முன்சொல்லி முடிந்த சிருஷ்டிக்கும் இனிச் சொல்லப்புகும் பலப்ரதானநிலைக்கும் இடையேயுள்ள இது பிரகரணத்தால் வேதத்திற் சொல்லியவாறே பகவதநுப்பிரவேசம் சொல்லுமிடமாயிருத்தலாலும், நுண்மணல் ஜீவாத்மபரமாயிற்று. இனி, 'நித்திலத்தன்ன வெண்மணல்பரப்பி' என்பதே பாடமாயின், மணல்போலும் உயிர்களிடத்தில், அவ்வொருமை தன்வடிவைப் பரப்பி எனப் பொருளுரைத்துக்கொள்க. பரத்தல்—வியாபித்தல். இங்கு, 'கரந்தசில்லிடந்தொறும், இடந்திகழ்பொருள்தொறும், கரந்தெங்கும் பரந்துளன்' என்ற திருவாய்மொழிப்பொருள் சிந்திக்கத்தக்கது.

இனி அப்பரம்பொருள் ஜீவாத்மாக்களுக்குப் பலன் அளித்தற்கு இருக்கும் இருப்பைச் சொல்லுகிறது,

'வேரும்வித்துமின்றித்தானே
தன்னிலை அறியாத்தோன்மிகுபெருமா' என்று.

வேரும் வித்துமின்றி என்றது நாட்டிற் பாட்டுக்குப் பலன் அளிக்கும் பெருமாக்களைப்போலே வேரும் வித்தும் வேண்டுதலின்றியே என்றவாறு. அதாவது:—வேர் என்றது அவலம்பத்தையும் (பற்றுதலையும்) வித்தென்றது காரணத்தையும் குறித்துநிற்றலால், யாதொருபற்றுதலும் யாதொரு காரணமும் இல்லாமலே என்றபடி. நாட்டிற் பாட்டுக்குப் பலனளிக்கும் பெருமாக்கள், பாட்டுடைத்தலைமக்களும், மாமரங்களும். மாமரத்துக்கு வேரும் வித்தும்போலே தலைமக்களுக்குப் புகழும், பாட்டும் பற்றும், காரணமுமாயின. புகழ் உடம்பாதலாற் பற்றாயிற்று. அப்புகழைத்தோற்றுவித்தலாற் பாட்டு வித்தாயிற்று. (மாமரம் பாட்டுக்குப்பயனளித்தலாவது, வளர்ப்பார் அதற்குப்படும்பாட்டுக்குத்தக்கவாறு பயனளித்தல்.) அதாவது பரம்பொருள் ஜீவாத்மாக்களில் அநுப்பிரவேசம் செய்துநிற்கும்நிலைக்கு யாதொரு சாதனமுமில்லை; காரணமுமில்லை என்றபடி. கருணாகாரியம் என்பது குறிப்பு. தானே என்றது இயல்பாகவே (நிற்கும்) என்றவாறு. மணற்பரப்பில் வேரும்

வித்துமின்றித் தானேநிற்கும் தன்னிலை எனக் கூட்டுக. 'நிலை' எனப் பின் வருதலால் நிற்கும் என்பது பெறப்பட்டது.

இவ்வடிகளால் அப்பரம்பொருள் தன்னை அடைந்தார்க்கு அது தானே நின்று பலனளித்தற்குச் சித்தமாய் உடனுறைந்து பிறிதொன்றும் தனக்கு வேண்டாதிருக்கும் நிலைகூறி, இதன் குறிப்பால் நாட்டிற் பாட்டுடைத்தலைவர் இருக்கும் இருப்பின் வேறுபாடு காட்டப்பட்டது.

இனி அப்படி அது சித்தமாயிருந்தாலும் அடைந்தார் விரும்பிய பொருள் எல்லாம் அளித்தற்குவேண்டும் மஹைசுவரியமுடையதாயிருக்குமோ என்னும் சங்கையைப் போக்குகிறது தன்னிலையறியாத் தோன்மிகு பெருமா என்று. இவ்வடி 'தன்னிலையறியாத்தொன்மிகு பெருமரம்' என்று ஏடுகளி லெழுதப்பட்டிருக்கிறது. 'மூவகை',என்று இதன்மேல் மகர உயிர்மெய் வருதலால் 'மா' என மகரவொற்று வேண்டாமலே எழுதல் அமையும். அமையவே மா என்பதிலுள்ள ரகர உயிர்மெய்க்கும், மா என்பதிலுள்ள காலுக்கும் ஏட்டெழுத்துக்களில் வேற்றுமை இல்லாமையால் பெருமா என்பதிலுள்ள காலை ரகாமாகக்கருதி, மூவழியெனப் பின்வரும் மகரத்தை நோக்கிப் 'பெருமரம்' என விரித்தெழுதப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. 'பெருமரம்' என்ற பாடத்தைக் காட்டிலும் 'பெருமா' என்ற பாடம் சிறப்புடையதாகவும், பெருமரம் என்ற பாடத்துக்குரியபொருளைச் சிறிதும் விடாததாகவுமிருத்தலாலும், பின் 'ஆமா' என்று சுட்டப்படுதலாலும் 'பெருமா' என்ற பாடம் கொண்டு உரைவரையப்படுகிறது.

நாட்டிலுள்ள பாட்டுடைத்தலைவர்கள் அளவுபட்ட பொருளுடையாராயிருப்பாராதலால் அவர் தம்நிலையறிந்து வருவாயிற் கால்வழங்கி வாழ்வர்; தம் நிலையறியாது வழங்குவாராயின், 'உளவரை தூக்காத வொப்புரவாண்மை—வளவரை வல்லைக் கெடும்' என்றபடி மிகுந்த செல்வமிருந்தாலும் அது விரைந்து கெடும் என்பர். இதன் செல்வம் அன்னதன்று என்பது தோன்றத் 'தன்னிலையறியா' என்கிறது. நிலை என்றது நிற்குமிடத்தையும் செல்வத்தையும் உணர்த்தும் இடப்பெயர் செல்வத்தை யுணர்த்துதல் 'இடனில் பருவத்தும்' என்பதனாலும், நிலை

யின் பரியாயமாகிய ஸ்திதி என்னும் சொல்லால் உலகிற் செல்வத்தை யுணர்த்துதலாலும் அறியலாம்.

இங்கு பரம்பொருளுக்கு, சேதநா சேதனாத்மகமான உபய விபூதிகளும், அந்தராத்மாவாய் நின்று வஸிக்கும் இடமாயும், உடைமையாயும் சொல்லப்பட்டிருத்தலால் அவை அப்பரம்பொருட்குத் தன்னிலையாயின.

இன்னும் தன்னிலை யென்பது உபாஸகர்களுக்குப் பலன் அளித்தற்கு அவர் வழிபட்டொழுகுமாறு தான் அதிஷ்டித்திருக்கும் திவ்ய மங்கள விக்ரஹங்களுமாம்.

இனி அவ்வைசுவரியமும் காலமெல்லாம் வேண்டுவார்க்கெல்லாம் வேண்டியவாறே கொடுப்பிற் குறைவுபடாதிருக்குமோ என்னும் ஆசங்கை நீங்க 'அறியா' என்கிறது.

அதாவது காலதேச பரிமாண ஸங்கியாதிகளாலே இஃது இவ்வளவென்று பரிச்சேதித்து ஒருவராலும் அறிய முடியாத என்றபடி. அறியா என்பதற்கு வினைமுதல் சொல்லப்படாமையால் ஒருவராலும் என்பது தானே பெறப்பட்டது. பெறவே ஸர்வேசுவரனாலும் அவ்வாறு அளவிட்டறியப்படாதது அவனுடைய உபயவிபூத்யைசுவரியம் என்பதும், அன்னதே அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹம் என்பதும் கூறியவாறாயிற்று. இது ஐசுவரியபரமான பொருள். இதற்கு, 'தனக்குந்தன்றன்மையறிவரியான்' என்ற திருவாய்மொழியில் நோக்கு.

இனி அநுப்பிரவேசஸ்திலையைச் சொல்லும்போது 'உணர்ந்துணர்ந்துணரினு மிறைநிலையுணர்வரிது' என்ற திருவாய்மொழிப் பொருளில் நோக்கு என்க. 'தன்வலியறியா' என்பது பாடமாயின் அனந்தசக்திகளையுடைய எனப் பொருளுரைத்துக்கொள்க.

'தோன்மிகு பெருமா' என்றது அவ் வநுப்பிரவேசஸ்திலையும், உபயவிபூத்யைசுவரியமும் திவ்யமங்கள விக்ரஹங்களும், அநாதி ஸித்தமாயும் ஸர்வவ்யாபகமாயும் உள்ளமகிமையையுடையதாய் என்ற வாறு. இங்கேனும் 'பெருமான்' என்னாது 'பெருமா' என்றது ஈறில

பெருமான்* பெருமாவாயிருக்கும் என்னும் சாடேக்கியைத் தோற்றுவித்துக் கொண்டு, அப்பரம்பொருள் அநாதியேயாயினும் பிராகபாவம்போலழியாது, அனந்தமாயுமிருக்கும் என்னும் பொருள்தோன்ற நின்றது.

தொன்மை - பழமை. அதற்கு மிகுதியாவது அநாதியாதல். பெருமை - வியாபகத்தன்மை. ஐசுவரியத்துக்கு வியாபகத்தன்மையாவது: பிறர் ஐசுவரியங்கள்கீழ்ப்படத் தான் மேற்பட்டுக் குறைவுபடாது நிற்றல். திவ்யமங்களவிக்ரகங்களுக்கு வியாபகத்தன்மையாவது: அடியார் நினைத்தவிடத்தெல்லாம் அவர் நினைத்தவடிவுடையனாய் நிற்றல். அந்தராத்மாவுக்கு வ்யாபகத்தன்மையாவது எல்லாவுயிருள்ளும் தப்பாமேயிருத்தல். அறியா என்னும் செயப்பாட்டுவினைப்பெயரெச்சம் சினைவினைப்பாற்பட்டு மாவென்னும் முதற்பெயர்கொண்டது. ஒருமையாகிய மா என இயையும். இது குறிப்புவினைப்பெயரடுக்கு. மா - மகிமையுடையது. மகிமை - அகடிதகடனாசாமர்த்தியம். அது 'தன்னுள்ளே சகமும் அந்தச் சகத்துள்ளே தானுமாகி' நிற்கும் நிலை. இதுவும் தந்நிலை எனப்படும்.

இவற்றால் பரமோதாரசீலமும், கொடுக்கக் குறைவுபடாத மஹைசுவரியமுடைமையும், பலப்ரதானத்துக்கு ஸாந்நித்யமுடைமையும், ஸந்நிஹிதத்வமும் ஒருங்குகூறப்பட்டன.

இனி, வெண்மணற்பரப்பிலே வேரும் வித்துமில்லாமலே நிலைபெற்றிருக்கும் இருப்பு ஒருவராலும் அறியமுடியாத மிகமுதிர்ந்த பெரிய மாமரம் என்னும் பொருள்தோன்றக் கூறிய அந்யாபதேசத்துக்கு, பலப்ரதானம் செய்யாநிற்கும் 'வாஸுதேவதரு' என்பது ஸ்வாபதேசமாகும்.

(தொடரும்)

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

---

*'ஈறில் பெருமான்'—இறுதியில்லாத பெருமான்; இறுதி—பெருமான் என்பதிலுள்ள னகரவொற்று. அது இல்லாதிருப்பது, பெருமா. அது அழிவில் பெருமான் என்பதைச் சாடுவாலுணர்கின்றது. சாடேக்கியாலும் பொருளுணர்த்துதலை, "மிடியென்னுங் காரணத்தான் மேன்முறைக் கண்ணே, கடியென்றார் கற்றறிந்தார்" என்பதனாலறிக.

ஸ்ரீ:

# வெண்பாமாலையாராய்ச்சி

[மதுரை, ஸம்ஸ்க்ருதகாலேஜ் ஆசிரியர்,
ஸ்ரீமாந் T. N. அப்பனையங்கார் எழுதுவது.]

[௨௮-ம் தொகுதியின் ௫௦௪-ம் பக்கத் தொடர்ச்சி.]

## [ஆகோள்.]

இனி, ஆகோளென்பது ஊர்கொலை நிகழ்ந்தபின் வெட்சியார் தம்மை விலக்குவாரின்றி அங்குள்ள ஆநிரையைக் கைக்கொள்ளலென்ப. தொல்காப்பியமும் இத்துறையினை இப்பெயரானே வழங்கிற்று.

மற்றைத்துறைகளெல்லாவற்றிலும் இதுவே இத்திணைக்குச் சிறப்பாக உரிமையுடையது. அவை யாவும் இதன் காரணங்களாய் முன்னும்பின்னுந் தொடர்புற்றிருப்பன. ஆகலினானே ஆசிரியர் அவற்றையும் தனித்துறைகளாக வகுத்துக்கூறினர்.

அங்ஙனமாயின், "வெட்சி நிரைகவர்தல்" என்னுந் திணைப்பொருளோடு இத் துறைப்பொருளும் ஒன்றுபடுவதால் இரண்டற்கும் வேறுபாடு யாதோ எனின், திணைப்பொருளாய நிரைகவர்தல் தனக்குக் காரணங்களான வெட்சியரவமுதல் வெறியாட்டீறாகப் பலவகைப்பட்ட தொழில்நிகழ்ச்சிகளையும் உளப்படுத்திநிற்பது. துறைப்பொருளாய நிரைகவர்தல் அன்னதன்று. ஊர்கொலைப் பின்னர் வெட்சியார் எதிர் விலங்குவாரின்றி ஆவினங் கைப்பற்றிய நிலைமைமட்டில் அஃதுணர்த்துவதாகும். ஆகவே திணை ஒரு பெரும்பகுதியும் துறை அதன் உட்பிரிவாயதொரு சிறுபகுதியுமாக வேறுபாடு விளங்கிக் கிடந்தது.

அற்றேல் இப்படல இறுதிக்கண், "வெட்சித்திணைப் பாட்டு இரண்டும் துறைப்பாட்டுப் பத்தொன்பதும் முடிந்தன" என்று காணும் வாக்கியத்துள், துறைப்பாட்டின்வேறாகத் திணைப்பாட்டுக் குறிக்கப் பெறுவதால், இரண்டும் வெவ்வேறு பொருளுடையவென்று பெறப்படுமாலோ எனின், அற்றன்று. திணையினாற்கருதியபொருளே அதன் துறைகளினாலும் விரித்துரைக்கப்பெறுவதாம். துறைகளின் தொகுதியைவிடுத்துத் திணையென வேறுகூறவேண்டுவதின்று. ஆயினும்

அங்கு திணைப்பாட் டென்று குறித்தது, அத்திணையின் பொருளை உதாரணமுகத்தால் தனியே விளக்கிக்காட்டல் கருதியதன்றிப் பிறிதன்று. அத்திணைப்பாட்டும் யாதானு மொரு துறையின்பாற்பட்டு அடங்கற்குரியதே எனக்.

இனி, இத்துறையின்வரலாற்றினுள் *'கொடுவரி கூடிக் குழூஉக் கொண்டனைத்தால்' என்றது, வெட்சியார் தம்மை விலக்குவாரின்றி ஆக்கொண்டதை உவமையான் விளக்கியவாறு. பசுக்கூட்டத்திற் புலி யொன்று புகின் காவலர் அஞ்சி அகன்றோடுவதல்லது அணுகச்சென்று விலக்குதலில்லை, புலிகளும் பலவாய்த் திரண்டாற் சொல்லவேண்டுமோ எனக. அன்றியும், "புலிதானே புறந்ததாக் குட்டி கோட்படாது" என்றாங்கு, ஆநிரைக்கு அழிவுநேராவகை வெட்சியார் அவற்றைக் கைப் பற்றியபின் புறங்காத்துநின்றமையும் இதனாற் போதரும். அப்பொழுது மறவர் புலியினமாகவும், ஆநிரை அவற்றின் குட்டிகளாகவும் உவமைக் கேற்ப வுரைக்கத்தக்கது.

'நெடுவரை நீள்வேய் நாலு நடுவூர்' என்றது, கொடுவரிகூடிக் குழூஉக்கொள்ளுமாறு மலையுங் காடுஞ் சார்ந்த இடவமைதியின் ஏற்புடைமை காட்டியவாறு.

'கணநிரைகைக்கொண்டு கையகலார்' என்றது, நிரைகள் இடையூறுறாமற் கூட்டங்கூட்டமாக நின்றநிலையிலே அகப்படுத்தி, மீட்பாருளராயின் வந்துகாண்மின் என்பது போன்ற வீரக்குறிப்புடையராய், விரைந்துசெல்லின் ஆக்கள் துன்புறுமென அவற்றிற்கு அருளுடைமைகாட்டி அகலாதுநின்ற வெட்சியார்நிலையினை வெளியிட்டவாறு.

'நிணநிரைவேலார்' என்றது, இவ்வளவிற்கும் முற்பட அவர்கள் ஊர்கொலை நிகழ்த்தினமை குறிப்பித்தவாறு. 'நின்றநிலை' என்றது, அவர் சலிப்பின்றிநின்றமை என்றவாறு. இதனைக் 'கண்டோர்கூற்று' என்றார் நச்சினார்க்கினியர். இவை நிற்க.

---

*கொடுவரிகூடிக்குழூஉக்கொண்டனைத்தா
னெடுவரைநீள்வேய்நாலு—நடுவூர்க்
கணநிரைகைக்கொண்டுகையகலார்நின்ற
நிணநிரைவேலார்நிலை.

[பூசன்மாற்று.]

பூசன்மாற்றென்பது, ஆகோள் முற்றியபின்னர் வெட்சியார் பசுக்களைத் தமது இருப்பிடங்கொண்டேகும்பொழுது, கரந்தையார் தம் வலிமிக்கபடைகளைத் திரட்டி உளைத்தற்குரலோடு விரைந்தோடி வந்து நட்டாற்றிற் பெரும்பூசல்விளைக்க, வெட்சியார் அதனைத் தம் மறமிகுதியான் மாற்றிவிடுதலாம். ஆகவே கரந்தையார் நிகழ்த்தும் பூசலை வெட்சியார் விலக்கிவிடுவது எனப் பூசன்மாற்றென்னும் பெயர்க்குப் பொருள் காணத்தக்கது. பூசல்—சண்டை; மாற்று—அதனை அழித்தல், விலக்குதல் அல்லது தொலைத்தல் எனக் கொள்க. இத்துறை தொல்காப்பியத்தினும் இப்பெயரானே வழங்கப்பெற்றது. இங்ஙனம் கரந்தையார் பின்தொடர்ந்து பூசல்நிகழ்த்துழியெல்லாம் இடந்தோறும் நின்று நின்று வெட்சியார் அதனை மாற்றிச்செல்வர் என்றும் உரைக்கப் படுகிறது. இது நிற்க.

[சுரத்துய்த்தல்]

அவ்வாறு செல்லும் வீரர் அரியவழியின்கண்ணும் அகன்ற காட்டின்கண்ணும் ஆநிரைகளை ஊறின்றி உய்த்தலாகிய துறை சுரத்துய்த்தல் எனப் பெயர்பெறும். சுரம் - வழியும், காடும்; உய்த்தல் - செலுத்துதல். "அருஞ்சுரத்து மகன்கானத்தும்—வருந்தாம னிரையுய்த்தன்று" என்பது இத்துறைப்பாட்டின் கொளு. வழிக்கு அருமையாவது, மலையின்மீது ஊறுசெய் விலங்கும் ஏற்றிழிவுகளும் கவலைச் சின்னெறிகளும் உடைத்தாதல். காட்டிற்கு அகற்சியாவது, வழிதிசை தெரியாவாறு முடிவிடங்காண்டலரிய விரிந்த பரப்பினதாதல். ஆண்டு நிரையினை வருந்தாமல் உய்த்தலாவது, அவ்வவ்விடங்களில் அவற்றைப் புல்லாரவிட்டு மெல்லக்கொண்டேகுதல் என்க. 'வருந்தாமல் நிரையுய்த்தல்' காரணமாக இத்துறை புகழப்படுவது என்னும் கருத்தானே இவ்வெண்பாமாலையுடையார் இதனைப் "புகழ்சுரத்துய்த்தல்" என விசேடித்தார்.

இவ்வாறு நிரைகட்கு உறுகண் நோவகை உய்த்துச்சேறலாகிய சிறப்பானே ஆசிரியர் தொல்காப்பியரும் இத்துறையினுக்கு "நோயின் றுய்த்தல்" எனப் பெயர்கூறினர். ஆயினும் அங்ஙனம் உய்த்தற்குரிய ஆற்றினருமை ஆண்டுக் குறிப்பினாற் கொள்ளப்படும்,

இனி, இதன் வாலாற்றினுள் 'நெடுவரை' என்றது, அரியவழியும் அகன்ற காடுமுடைய நெடியமலையின்கண் என்றவாறு. 'நீழல்' என்றது, நிழலுள்ள விடங்களில் என்றவாறு. 'நிரைபுன்மேய்ந்தசைஇ' என்றது, ஆனினங்கள் புல்லை வயிறார வுட்கொண்டு, நிலத்திலேகிடந்து, தின்றவற்றைத் தேக்கிட்டு மென்று இளைப்பாறி என்றவாறு. "புணர்ந்துடன் செல்கென்னும்" என்றது நடப்பவும் நிற்பவும் கிடப்பனவுமாகி வேறு வேறு பிரிந்துபோகாமே ஒன்றுசேர்ந்து மெல்லச்செல்கவெனக் கட்டளையிட்டான் என்றவாறு. இதனால் வெட்சியார் தாம்கொண்ட நிரையினை இன்புறுத்திச் செலுத்திய அறனுடைமை விளங்கிக்கிடக்கின்றது.

'வின்மேலசைஇயகை' என்றது, கரந்தையார்பூசல்கடிதற்குக் கொண்ட வில்லைக் காலூறவூன்றி அதன்மீது தொழிற்படாது சார்த்திய கையினையுடைய என்றவாறு. அசைதல் அப்பொருட்டாதல் "இலமென்றசைஇயிருப்பாரை" என்னுந் திருக்குறளாலும் அறியலாம். 'வெல்கழலான்' என்றது அங்ஙனம் அசைந்திருந்தானாயினும் எந்நிலைக்கண்ணும் அவன் வேறல் ஒருதலையென்பது தோன்றக் காலிலே கட்டிய வீரக்கழலுடையவன் என்றவாறு. இதனால் அவ்வெட்சிவீரனது அஞ்சாநெஞ்சின் அசைவின்மை குறித்தவாறும்.

தன்மேற் 'கடுவரைநீரிற் கடுத்துவரக் கண்டும்' என்றது, தன் ஒருவனையே குறியாகக்கொண்டு கரந்தையார்பலரும் கடிதாக மேல்வரினும் என்றவாறு. கடுவரை - செங்குத்தான மலை. அதனினின்று நீர் இழிதல் அவரது வருகைக்கு உவமையாயிற்று. வரையினின்றிழியும் பெருவெள்ளத்திற்கு வழியடையாய்நிற்பது யாதொன்றுமில்லை; அதன் வேகமும் அளவிடங்காது; அவ்வாறே கரந்தைமறவரும் தம்மைத் தடைசெய்வார் எவருமின்றி மிகவும் விரைந்தோடிவந்தனரென்பதாம். கண்டும் — அவர் வருதலைப் பிறர்சொல்லக்கேட்டவளவின்றித் தானே கண்ணாரக்கண்டும். கண்டும் அசைஇயகை கழலான் நிரை நீழல் அசைஇச் செல்கென்னும் எனக் கூட்டுக. இச்செய்யுளில் வரையினின்று இடையீடின்றிப் பெருந்திரளாக இழியும் கரந்தைமறவர்க்கு, அவ்வரையினின்று இடையீடின்றிப் பெருவெள்ளமாயிழியும் அருவிநீரை உவமை கூறியது பெரிதும் நயம்பாடுடையது. "இது கண்டோர் கூற்று" என்றார் நச்சினார்க்கினியர்.

[தொடரும்]

உ

# புறநானூற்றுக்குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., Ph. D., L.T.,) அவர்கள்
எழுதுவது.

3\. உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற
வேம முரசி மிழுமென முழங்க
நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற்
றவிரா வீகைக் கவுரியர் மருக
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ
பொன்னோடைப் புகாணிநுதற்
றுன்னருந்திறற் கமழ்கடாஅத்
தெயிறுபடை யாக வெயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானையிரும் பிடர்த்தலை யிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி
நிலம் பெயரினு நின்சொற் பெயரல்
பொலங்கழற்காற் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப
வூரில்ல வுயவரிய
நீரில்ல நீளிடைய
பார்வ லிருக்கைக் கவிகண் ணோக்கிற்
செந்தொடை பிழையா வன்க ணாடவ
ரம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவு
முவவ மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையி னிரவலர் வருவது
முன்ன முகத்தி னுணர்ந்தவ
ரின்மை தீர்த்தல் வன்மை யானே.

ஓர் அரசன் கவலையின்றி இனிது வாழ்தற்கு ஓராழித்தலைமை பூண்டு நாடுமுழுவதும் ஆணைசெலுத்தியோரதுமரபிற் பிறப்பும், நோயின்றி உடல்வலியோடிருக்கையும், குற்றமற்ற மனைவியுடன் வாழ்வும், வலிமிக்கதானையொடு பகைவர்தேயங்களை யழிக்கையும், அங்ஙனமழித்துப் பெற்ற பொருளை வறுமையுற்று வருந்தும் புலவர்க்கு அவரவர் முகக்குறியறிந்து கொடுத்தலும், தன் சொல்லினின்றும் ஒருபோழ்துந் தவறாமையும் இன்றியமையாதனவாம்.

அவற்றுள், சொற்பிறழாமை யென்ற பண்பைத் தவிர்த்து மற்றவை கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதி என்ற பாண்டியவரசனிடத்து உள்ளன என்றும், ஈற்றிற்கூறிய சொற்பிறழாமை என்ற குணமும் இருத்தல்வேண்டுமென்பதை இரும்பிடர்த்தலையார் இச்செய்யுளிற் கூறுகின்றனர்.

முதல் ஐந்து அடிகளான் அவன் முன்னோர் பெருமையும், 15, 16-ஆவது அடிகளில் அவனது நோயற்ற வாழ்வும், 6-ஆவது அடியில் அவன் மனைவியின் கற்பும், 7, 8, 9, 10, 11, 12, 13-ஆவது அடிகளில் அவன் தானையின் பெருமையும், அவன் பகைவரை அழித்தலும், 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26-ஆவது அடிகளில் வறுமையாலும் வழியின் கொடுமையாலும் துன்புற்ற புலவர்க்கு ஈதலும், 14-ஆவது அடியில் அவன் தன் சொற்பிறழாதிருத்தல்வேண்டுமென்பதுங் கூறப்பட்டன.

நிழற்ற, முழங்க என்ற வினையெச்சங்கள் உய்த்த என்ற பெயரெச்சத்தைக்கொண்டு முடிந்தன. உய்த்த என்பது 'கேள நெஞ்சிற் றவிராவீகைக் கவுரியர் மருக' என்ற விடத்துள்ள கவுரியர் என்பதனோடு முடிந்தது. கவுரியர் என்ற சொல்லின் பொருள் யாதெனவறிதல் வேண்டும். பாண்டியவரசர் பாண்டவ வமிசத்தினர் என்று பெரியார் சிலர் கூறுகின்றனர். அவ்வாறாயின் கவுரியர் என்ற சொல் கௌரவ்யா: என்ற சொல்லின் தற்பவமாகும். கௌரவ்யா: என்ற சொல்லுக்குக் குருவமிசத்திற் பிறந்தோரென்று பொருளிருப்பினும், திருதராட்டிரன் மக்களுக்கே அச்சொல் வழங்கியுள்ளதேயெனின், அற்றன்று; வியாசபாரதத்தில் வீடுமனுக்குப் பலவிடங்களில் கௌரவ்ய: என்ற சொல்லும், ஆச்வமேதிக பருவத்திற் சிறுபான்மை பாண்டவர்க்கும்

கௌரவ்பா: என்ற சொல்லும் வழங்கியிருத்தலின். ஆகலின் ஈண்டுக் கவுரியர் என்ற சொல் பாண்டவரைக் குறிக்கு மென்னலாம்.

எயிறுபடையாக வெயிற்கதவிடாஅ என்ற அடியிலுள்ள எயிற்கத விடா என்பதைக் கருங்கையொள்வாட்பெரும்பெயர்வழுதியின் செயலாக் கொண்டு, இடாஅ என்ற வினையெச்சத்தைச் சாயா என்ற பெயரெச்சத் துடன் பொருத்துகின்றனர் புறநானூற்றுரைகாரர். அவ்வாறே நச்சினார்க்கினியருங் கொண்டனர் என்பது தொல்காப்பியத்து எச்ச வியல் 16 ஆவது சூத்திரத்தின்கணுள்ள அவரது உரையால் விளங்கும். இதனைக் கீழ்க்குறிப்பிற் காட்டியுள்ளார் தாக்ஷிணாத்யகலாநிதி மகா மகோபாத்தியாய ஐயரவர்களும். அன்றியும் இடாஅ என்பது கைவிடாத என்ற வருவித்த ஒருசொல்லைத் தழுவுவதாகவுங் கூறலா மென்றும், பிணிக்கோண்ட என்பதைத் தழுவுவதாக வேறொரு சாரார் கூறுகின்றனர் எனவும் உரைத்தனர் புறநானூற்றுரைகாரர். முதற்பொருளில் 'எயிற்கதவிடுதல்' யானையின் றொழிலாகாது அரசன் றொழிலாவதோடு யானையைப்பற்றித் தொடர்ந்து கூறுஞ் சொற்றொடரி லிருந்து 'எயிறுபடையாக வெயிற்கதவிடாஅ' என்பதைப் பிரித்து, இடாஅ என்பது சாயா என்பதைத் தழுவும் என்று கூறவேண்டிய தாகவுமுள்ளது. இரண்டாவது பொருளில் 'கைவிடாத' என்ற சொல்லை வருவித்தல்வேண்டும். மூன்றாவது கூற்றில் பொருள் இனிது விளங்கவில்லை.

பொன்னோடைப் புகரணிநுதல், துன்னருந்திறல், கமழ்கடாத்து, கயிறுபிணிக்கோண்டகவிழ்மணிமருங்கு என்ற இவையெல்லாம் தனித் தனி அன்மொழித்தொகையாகிப் பின்னர் பெருங்கையானை என்பதற்கு அடைமொழியாக, 'பொன்னோடை............பெருங்கையானை' என்றது ஒருதொகைமொழியாயிற்று என்று கூறலாமெனத் தோற்றுகின்றது. அத்தோற்றத்திற்குக் காரணம், 'பெயர்நிலைக்கிளவி...'(தொல்.சொல்.70) என்ற சூத்திரத்திலுள்ள 'பெயர்நிலை' என்பதைச் சேனாவரையர் 'பெயராகிய நிலையையுடையது பெயர்நிலையென அன்மொழித்தொகை' என்று கூறி அதனைக் 'கிளவி' என்ற சொல்லோடு சேர்த்துத் தொகை யாக்கியதே. அவ்வாறுகொள்ளின் 'பொன்னோடைப்புகரணிநுதல்', 'துன்னருந்திறல்' முதலியவற்றிற்குப் பொருள் கூறுமிடத்துப் 'பொன் னோடைப் புகரணிநுதலையுடைய', 'அணுகுதற்கரியவலிமையையுடைய'

என்று வன் பொருள்கொள்ளவேண்டுமென்பது படிப்போர்க்கு எளிதில் விளங்கும்.

இந்தச்செய்யுளை யியற்றிய புலவர் இக்கவியில் 'இரும்பிடர்த்தலை' என்ற தொடரின் குறிப்பால் தம்மையும், 'கருங்கையொள்வாட்பெரும் பெயர் வழுதி' என்ற சொல்லால் அரசனையுங் கூறினர்.

'நிலம் பெயரினு நின்சொற் பெயரல்' என்ற அடியில் பெயரல் என்ற வினைக்கு 'நீ' என்பது எழுவாயாகும். நின்சொல் என்பது நின் சொல்லினின்று எனப் பொருள்தந்து ஐந்தாம்வேற்றுமையுருபு தொக்குநின்ற சொல்லாகும். 'பெயரல்' போன்றனவற்றை எதிர்மறை வியங்கோளாக ஆசிரியர் தொல்காப்பியனார் சூத்திரங்களிற் கூறுதிருப்பி னும், பொருளதிகாரம் 146 ஆவது சூத்திரத்தில் 'அழியல்', 'அஞ்சல்' என்ற சொற்களை எதிர்மறையில் முன்னிலையொருமையாக வழங்கி யிருத்தலின், அல்லீற்று வினைமுற்று எதிர்மறையில் வருமென்பது அவர்க்கு உடன்பாடாகும்.

ஊரில்ல, உயவரிய, நீரில்ல, நீளிடைய என்ற சொற்கள் பலவின் பால்வினையாலணையும்பெயராய்நின்று 'அன்னருங்கவலை' என்ற சொல்லைத் தழுவுகின்றன. கவலை என்பது ஈண்டுப் பலவின்பால் என்பது வெளிப்படை.

உயவரிய என்பதற்குப் 'பொறுத்தற்கரிய உயங்குதலையுடைய' என்று பொருள்கூறினர் உரைகாரர். அச்சொற்கே 'பிழைக்குஞ் சாதனமின்மையையுடைய' என்று பொருள் கூறலாமென்கின்றனர் ஒரு பெரியார், அவரது பொருள் பொருந்துமெனத் தோற்றுகின்றது.

'அது முன்ன முகத்தின் உணர்ந்து' என்ற விடத்தில் 'அது' என்ற சொல் 'ஊரில்ல....இரவலர் வருவர்' என்ற தொடரின் பொரு ளைக் குறிக்கின்றது. இதுபோன்ற வழக்குக்களைச் சேனாவரையர் 'சுட்டுமுத லாகிய காரணக் கிளவியுஞ்—சுட்டுப்பெய ரியற்கையிற் செறி யத் தோன்றும்' (தொல். சொல். 40) என்ற சூத்திரத்தின்கீழ்த் தன் னினமுடித்தலாற் கொண்டனர்.

'வன்மையான்' என்றவிடத்து 'ஆன்' என்ற மூன்றனுருபு ஏதுப்பொருட்கண்[1] வந்தது.

ஏமம், நே, கடாம், மூகம் இவை முறையே க்ஷேம: ஸ்நேஹ: [illegible] இவற்றின் தற்பவம்; நேமி என்பது தற்சமம்.

நே ஏ (ந்+ஏஎ) ஈண்டு 'ஏஎ' என்பது மூன்றுமாத்திரை கொண்ட ஓரொலியெழுத்தென்பது வீரசோழியவாசிரியர், நன்னூலார் முதலியோர் கருத்து. தொல்காப்பியனார்கருத்தோ அவ்வாறின்றி 'ஏ' என்பதும் 'எ' என்பதும் தனியொலி யெழுத்துக்கள் என்பது.

(1) மூவள பிசைத்த லோரெழுத் தின்றே. (எழுத். 5)

(2) நீட்டம் வேண்டி னவ்வள புடைய
கூட்டி யெழூஉதல்[2] லென்மனார் புலவர். (எழுத். 6)

(3) குறியதன் முன்னமு மோரெழுத்து மொழிக்கு
மறியத் தோன்று மகரக் கிளவி[3]. (எழுத். 226)

(4) குற்றெழுத் திம்பரு மோரெழுத்து மொழிக்கு
நிற்றல் வேண்டு முகரக் கிளவி[4]. (எழுத். 267)

(5) எகர வொகரம் பெயர்க் கீறாகா
முன்னிலை மொழிய வென்மனார் புலவர்
தேற்றமுஞ் சிறப்பு மல்வழி யான[5] (எழுத். 272)

(6) ஏயெ னிறுதிக் கெகரம் வருமே[6] (எழுத். 277)

(7) வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே
யோகரம் வருத லாவயி னான. (எழுத். 292)

---

1 ......இன்னானேது......(தொல். சொல். 74) என்ற சூத்திரத்தில் 'ஆன்' என்பது ஏதுப்பொருளில் வருமெனக் கூறியிருத்தல் காண்க.

2 எழூஉதல் = எழுப்புதல் (நச்.)

3 உதாரணம். யாஅக்கோடு, பிடாஅக்கோடு...

4 உதாரணம் – உடூஉக்குறை

5 உதாரணம் – எஎக்கொற்றா.

6 ,, ஏஎக் கொட்டில்.

(8) அளபெடை மிகூஉ[1] மிகர விறுபெய
ரியற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப. (சொல். 125)

(9) அளபெடை யசைநிலை யாகலு முரித்தே. (பொரு. செய். 17)

என்ற சூத்திரங்களால் தெளிவாகின்றது. இவற்றுள் முதற் சூத்திரத்தில் மூவளபிசைக்கும் ஓரெழுத்து தமிழில் இல்லையென்றும், இரண்டாஞ்சூத்திரத்தில் நெடிலுக்குமேல் அளவை நீட்டவேண்டின், அதன்பின்னர் வேண்டிய அளவுகொண்ட எழுத்துக்களை எழுப்ப வேண்டுமென்றும், 3, 4, 5, 6, 7-ஆவது சூத்திரங்களில் ஆ, ஊ, ஏ, ஏ, ஓ இவற்றிற்குப் பின்னர் சந்தியில் முறையே அ, உ, எ, எ, ஒ இவை வருமென்றும் கூறியிருப்பதும், 3, 4, 6, 7 ஆவது சூத்திரங்களிலுள்ள தோன்றும், நிற்றல்வேண்டும், வரும், வருதல் என்ற சொற்களும், 5 ஆவது சூத்திரத்தில் எகர வீறாக 'ஏஎ' என்பதைக் கூறியிருப்பதும் 8 ஆவது சூத்திரத்தில் 'மிகூஉம்' என்ற சொல்லும், 9 ஆவது சூத்திரத்தில் அளபெடையும் அசையாகலாம் என்று கூறியிருப்பதும் நோக்கத்தக்கன. மூன்றுமாத்திரை, நான்குமாத்திரை கொண்ட ஓரொலி யிருக்குமாயின் 'அறியத் தோன்று மகரக்கிளவி' 'நிற்றல்வேண்டு முகரக் கிளவி' என இங்ஙனங்கூறாது 'நீளல்வேண்டு மூன்றே மாத்திரை' என்பது முதலியனவாக ஆசிரியர்கூறியிருப்பர். 'மூவள பிசைத்த லோரெழுத் தின்றே' என்றுங் கூறார். 8 ஆவது சூத்திரத்தில் 'மிகூஉம்' என்னாது 'கொண்ட' என்றுங் கூறியிருப்பர். அன்றியும், ஆஅ, ஈஇ, முதலியவற்றை அளபெடையென்றால் ஆங்குள்ள அ, இ என்பவற்றிற்கு அளபெடையென்று பெயரா? அன்றாயின் 'ஆஅ' எனற விடத்து அளபெடையாகிய 'அ' அசையாகுமென்று உணர்த்தும் 'அளபெடை யசைநிலை யாகலு முரித்தே' என்ற சூத்திரத்திற்குப் பொருள் அமையுமா? ஆகலின் தொல்காப்பியனார்கொள்கைப்படி 'ஏஎ' முதலியவற்றில் 'எ' என்பது ஒரு தனி யொலி யெழுத்தென்றும் அதற்கே அளபெடையென்ற குறியென்றுங் கூறலாகும்.

[தொடரும்.]

---

1 உதாரணம்—தொழீஇ.

# கம்பராமாயணக் கௌஸ்துபமணிமாலை.

[கே. என் சிவராஜபிள்ளை.]

(உஅ-ம் தொகுதியின் ௬அஅ-ம் பக்கத் தொடர்ச்சி).

41 விரிந்த சாத்திரத் தொகை,கலைத் தொகுதி,வேற் றுமையே
தெரிந்தி லார்பலர் ; தெரிந்தவர் கலையினுட் பிரிவாய்ப்
பொருந்தெ ழிற்கலை தொழிற்கலை வேற்றுமை பூட்டார் ;
திருந்து சித்திர கலையுளுங் கவிக்கலைத் தெரியார்.

42 ஓவியம் சிற்ப மெனுமுயர் கலையினுள் ளொதுங்குங்
காவிய மென்னுங் கலைபயப் பதோகவி னின்பம் ;
தீவு காவியக் கலைவரு வேற்றுமை தெரிப்பின்
பாவி கத்துரு மொழிகொடு பண்ணலே மண்ணி.

43 இன்னும் வேறொரு வேற்றுமை காவியத் தியலும் :
முன்னங் கூறிய சிற்பமோ வியமமை முறையுட்
டுன்னும் பாவிக வுருவொரு கணநிலைத் தொகுக்கும் ;
மன்னுங் காவியப் பொருளிறப் பெதிர்வினுன் மலியும்.

44 காவிய மென்னுங் கடற்படு நூனிரை கணிப்பார்
ஓவி யக்கலை யுள்ளுறை நோக்குண ராதே
கூவிக் காட்டிய கொள்கையுங் கொள்கையாக் கொள்ளேம் ;
மேவு சித்திரம் விழியிலான் மதித்திடின் விலையென் ?

45 ஆயினு மிஃதறிந் திலாா இத்தம் மதமாந்
தீய னுங்கிய சிந்தைய ராய்ச்செவிச் செறுத்தே
வாய னுங்கிய வாறுரை மதித்தனர் தமிழெந்
தாயு நுங்கிய தனியமு தலையெறி கடலே.

46 கம்பன் பாவருங் கனிவினைக் கனிதா வியலா ;
கம்பன் பாவருங் கடிமணம் மலர்தந்து கமழா ;
கம்பன் பாவருங் கவினுரு கலைதந்து நிலையா ;
கம்பன் பாவருங் கண்டிசை எண்டிசை காட்டா.

(வேறு)

47 அளப்பரு மான்ற தன்மை யாழ்ந்துகீழ் போகு நீர்மை
கிளப்பரு நளிர்மை யின்ன கெழுமிய குணத்தி னாலும்
களைப்பற வுயிர்கட் கோசைக் களிப்பையே யளிப்ப தாலும்
வளைப்புறு கடலுங் கம்பன் கவியென மருவிற் றன்றே.

48 சவியுறத் தெளித லாலும் தவழ்நயம் தழைத லாலும்
புவியுறு முயிர்க்கு மேலாம் புலம் நின்று விளங்க லாலும்
கவினுறு பொருட்கோ ரெல்லை கதுவுறு விதப்பி னாலும்
கவியுறு விசும்புங் கம்பன் கவியெனக் காட்டிற் றன்றே.

49 தொல்லையிற் றொடர்ந்த ஞானத் தொகைவயின் வருத லாலும்
வல்லையில் வரம்பி லின்பம் மக்கட்கு வகுத்த லாலும்
ஒல்லையி லொன்றே யாகி யொப்புயர் வின்மை யாலும்
எல்லையிற் பொருளுங் கம்பன் கவியென இலகிற் றன்றே.

50 சொல்வளம் பெரிதென் கோயான்? சொல்லினுட் டுளும்பு ஞான
நல்வளம் பெரிதென் கோயான்? நவையறு மணிகள் வீசும்
வில்வளம் பெரிதென்கோ யான்! வியங்கியம் விழுமி தென்கோ?
பல்வளம் செறிந்து பண்ணும் பரிமள மியன்ற பாவில்.

51 அழகினை முடியக் காண வகிலத்துட் புலவ ரெல்லாம்
பழகிய நூலின் பண்பே பற்றியொன் றென்றே கண்டார்;
பழையவா சனையிற் கம்பன் பைந்துணர் பூத்த பாவிற்
குழகெலா மொருங்கே கூடிக் குடியிருப் பதையுங் கண்டார்.

52 பூவிடைப் பொலிவு நோக்கிப் பொற்றிரு நளினஞ் சார்ந்தாள்
சேவுடைச் சிவனார் சோதி திகழவே யுமையுஞ் சேர்ந்தாள்
நாவினின் றொலிக்குஞ் சொல்லி னயமெலா மடுத்த கம்பன்
பாவிலிவ் விருபண் பொன்றப் பாரதி பருகி வென்றாள்.

53 வம்பவிழ் மலரில் வந்தோன் வகுத்தவர் கோடி யேனும்
கம்பனார் உதித்த பின்றான் கருவிய கதமுட் கொண்டான்,
கொம்பெனும் வாணி தன்னைக் குடிச்செய னீக்கி யன்னார்
பம்பிசை நாப்புக் காங்கே பணிசெய்து நிற்றல் கண்டே.

[தொடரும்.]

உ

# 'மணவாளன்' அல்லது பிடிவாதம்.

## ஓர் ஒற்றை அங்க ஹாஸ்ய நாடகம்.

[கே. ஸி. வீரராகவையர், எம்.ஏ., எல்.டி., சென்னை.]

### முகவுரை.

இது ஒரு சார்பு நூலாகும். ஜெர்மனி தேசத்தில் ராடரிக் பெனிடிக்ஸ் (1811—1874) என்ற ஒரு நடிகர் பல நாடகங்களைத் தமது தேசத்து நடவடிக்கைகளைப் பிரதிபிம்பித்து இயற்றினார். அவற்றுள் இக்ன்ஸின் அல்லது பிடிவாதம் என்பது ஒன்று. அது சமீபத்தில் ஆங்கிலத்தில் உரைமாறிச் சென்னை இந்தியன் ரிவியு என்ற மாதாந்தப் பத்திரிகையில் வெளியாயிற்று. அதைப் படித்தபோது, மனிதசுபாவம் வெவ்வேறு தேசங்களிலும் பற்பல காலங்களிலும் ஒன்றுபட்டு உளது என்று தோன்றியதால், அதைத் தமிழிலும் தழுவி எழுத வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அதன் பயனே இச்சிறிய நூல். அன்பர் படித்து அகமகிழ்ந்து, தாம் கண்ட அற்ற குற்றங்களைத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

### பாத்திரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | முருகன் | .... | ஒரு மிராசுதார். |
| 2. | வள்ளி | .... | ஷெயாரின் மனைவி. |
| 3. | நாராயணி | .... | ஷெ யார்களின் புத்திரி. |
| 4. | மணவாளன் | .... | நாராயணியின் நாயகன். |
| 5. | போகி | .... வேலைக்காரன் | காதலர்கள். |
| 6. | தாயி | .... வேலைக்காரி | |

மணவாளனின் மாளிகை,

ஓர் அறை.

[நடுவில் ஒரு வட்டமேஜை. அதைச்சுற்றி நாலு வெல்வெட்டு நாற்காலிகள். ஒருபுறத்தில் ஒரு சதுரமேஜை. மற்றொருபுறம் ஒரு பிரம்புமேஜை. மேஜைகளின்மேல் வெண்மைத்துணிகள் பரப்பப்பட்டிருக்கின்றன.]

## காட்சி I.

போகி:—[மேஜைகளிலுள்ள புழுதியைத் தட்டிச் சுத்தம்செய்து பாடிக்கொண்டு சிட்டியடிக்கிறான்.]

தாயி:—[வெளியிலிருந்து]போகி, போகி, கதவைத்திற.

போகி:—[கதவைத்திறக்கிறான்.]

தாயி:—[இரண்டுகைகளிலும் பக்ஷணங்கள் நிரம்பிய தட்டுக்களுடன் உள்ளேவருகிறாள்.]

போகி:—வா, நான் கொஞ்சம் உதவிசெய்கிறேன். அதைக்கொடு. [அவள் கையிலுள்ள தட்டு ஒன்றை வாங்கி மேஜைமேல் வைக்கிறான்.]

தாயி:—நம்முடைய எஜமானரின் மாமனார் மாமியார் இன்று "டினர்"க்கு இவிடம் வருகிறார்கள்.

மணவாளன்:—[கதவண்டைவந்துநின்று, உள்ளேநடக்கும் சம்பாஷணையை ஒற்றிக்கேட்கிறான்]

போகி:—அதற்கென்ன? நமது எஜமான தம்பதிகள் அனுபவிக்கும் ஆனந்தவாழ்வைக் கண்டு அவர்களும் மகிழ்வார்கள். உம்—உனக்கு ஒரு மாமனாரை என்றால் தாமுடியாது.

தாயி:—பிரவாயில்லை. அதற்கேன் கவலைப்படுகிறாய்? நானும் உனக்குத் தாமுடியாது.

போகி:—ஆமாம். நாம் இருவருமே ஒருவருக்கொருவர் போதுமானது. இல்லையா? [அறைமுழுவதையும் கவனித்துப்பார்த்துவிட்டு], கடவுள்கிருபை, வேலையெல்லாம்முடிந்தது.

தாயி:—என்ன? என்ன சொன்னாய்? ஆமாம்.

போகி:—என்னசொன்னாயா?

தாயி:—ஒன்றுமில்லை—ஆமாம் என்றேன்.

போகி:—அது போதாது—நான்சொன்னதை நீயும் சொல்லவேண்டும்.

தாயி:—எதை?

போகி:—"கடவுள்கிருபை, வேலையெல்லாம்முடிந்தது."

தாயி:—எதற்காக?

போகி:—அதுதான் நீதிமார்க்கம் - நல்லவழி,

தாயி:—என்ன! கேவலம் அது.

போகி:—ஒருவேலைமுடிந்ததும், சாதாரணமாக, "பேஷ், நன்றாய் முடிந்தது" "ஈசுவரகிருபை" என்று எவரும் சொல்வது சகஜமாயிற்றே.

தாயி:—வெற்றுப் பேச்சு, வீண் சொல்.

போகி:—அது வெற்றுப்பேச்சுமில்லை; அசங்கதமுமில்லை. ஏதேனும் ஒன்றைச் செய்துமுடித்தவுடன், நமது பெரியோர்கள் இந்த மாதிரி சொல—

தாயி:—போதும். நிறுத்து. வீண்பேச்சை வளர்க்காதே.

போகி:—தாயி, நிஜமாய்ச்சொல்லுகிறேன், தட்டாதே - நான் சொல்வது வீண்வார்த்தையல்ல - நீ என்ன, நிரீசுவரவாதியா? (மென்மையாய்) இந்தா, நான்சொல்வதை என்கூட ஒருதரம் சொல்லிவிடு— "கடவுள் கிருபை, வேலைமுடிந்தது"

தாயி:—மாட்டேன்.

போகி:—எனக்காக, ஒருதரம்.

தாயி:—முடியாது.

போகி:—(கொஞ்சம் சூட்டுடன்) முடியாதா?

தாயி:—முடியாது.

போகி:—நான் உன்னை என்னகேட்டாலும் இப்படித்தான்முடியாது, முடியாது என்கிறாய்.

தாயி:—ஆமாம், ஆமாம். எனக்குப் பிடியாததைச் சொல்லச் சொன்னபோதெல்லாம் அப்படித்தான் செய்வேன்; பத்துத்தரம் கேட்டாலும் அப்படித்தான்.

போகி:—இன்றைக்கு என்னவேளையோ? நான்சொல்வதை மறுக்கிறாய். உன்னைப் பத்துத்தரம் கேட்டாலும், மாட்டேன் என்றுதான் சொல்லப்போகிறாயோ?

தாயி:—ஆமாம்—இப்படி அசங்கதமாகக்கேட்டால்?

போகி:—அது அசங்கதமில்லையே. அதுபோகட்டும். நான் விரும்புவதற்காகவாவது அதைச்சொல்லக்கூடாதா?

தாயி:—நான்—சொல்ல—மாட்டேன்.

போகி:—[பயமுறுத்தி] தாயி!

தாயி:—[அதே தொனியுடன்] போகி!

போகி:—இப்பொழுது நீ சொல்லத்தான்வேண்டும்.

தாயி:—[சிரிப்புடன்] சொல்லவாவேண்டும்!!

போகி:—[உறுதியுடன்] ஆம், நான் கட்டளை இடுகிறேன்.

தாயி:—நீ என்ன! கனவுகாண்கிறாயா? அல்லது இன்று வெடிந்தவுடன் பூனைமுகத்தில் முழித்து எழுந்தாயா?

போகி:—விளையாட்டுவேண்டாம், நான் கவலையுடன் கேட்கிறேன். "கடவுள்கிருபை, வேலைமுடிந்தது" என்று ஒருதரம் சொல்லிவிடு.

தாயி:—[அவமரியாதையாய்] சொல்லிவிடட்டுமா?

போகி:—உம்.

தாயி:—[அவன்முன் நின்றுகொண்டு] சொல்லத்தான்வேண்டுமோ? சொல்லித்தீரணுமோ?

போகி:—சொல்லவேண்டும்; சொல்லித்தீரணும்.

தாயி:—அப்படியானால் நான் சொல்லப்போகிறதேயில்லை.

போகி:—(அடங்கியகோபத்துடன்) தாயி, உன்னை, வேண்டுகிறேன்.

தாயி:—முடியாது.

போகி:—கடைசிமுறை உன்னைவேண்டுகிறேன்.

தாயி:—முடியாது, நீ என்னசெய்தபோதிலும், முடியாது.

போகி:—சரி, பார்த்துக்கொள்ளலாம்.

தாயி:—உம், பார்த்துக்கொள்ளலாம்.

போகி:—(கோபத்துடன், அவள்முன் நின்றுகொண்டு) என்வேண்டுகோளுக்கிரங்காமல், நீ இப்படிப் பிடிவாதமாய் மறுக்கலாமா?

தாயி:—அப்படித்தான்.

போகி:—பிடிவாதத்தை விடமாட்டாய்?

தாயி:—மாட்டேன்.

போகி:—அப்படியானால், அதை விடத்தான்வேண்டும். (அவள் கையை இழுத்துக் கிள்ளுகிறான்).

தாயி:—ஐயோ!

போகி:—சொல்லிவிடு.

தாயி:—அது முடியாது, ஐயோ! ஐயோ?

போகி:—"கடவுள்கிருபை, வேலைமுடிந்தது" சொல்லு.

தாயி:—முடியாது, முடியாது. [அவனை உதறிவிட்டு, அவன் கையில் ஒரு அடி அடித்துவிட்டு, தன் கிள்ளுண்டகையில் ஊதுகிறாள்.] கிராதகா, இப்படியா என்னைக் கிள்ளுகிறாய்? சொல்லவேமாட்டேன், போ.

போகி:—சரி, நம்மிருவருக்கும் தீர்ந்துவிட்டது.

தாயி:—அப்படியேயிருக்கட்டும்.

போகி:—அவ்வளவு இலேசாய் என்னை விட்டுவிடலாமா?

தாயி:—இப்படி முட்டாள்தனமாய் நடந்துகொண்டால்?

போகி:—(பரிந்து) எனக்காகச் சிலவார்த்தைகள் சொல்லக்கூடாதா?

தாயி:—முடியாது, முடியாது, முடியாது.

போகி:—அப்படியானால், போ.

(மணிச்சப்தம் கேட்கிறது.)

தாயி:—சரி, இந்தவழக்கைப் பிறகு தீர்த்துக்கொள்ளலாம். (மெல்ல இடதுபுறமாகப் போகிறாள்.)

போகி:—(பின்சென்று, அவள் கையைப் பிடித்துக்கொண்டு) "கடவுள் கிருபை, வேலை முடிந்தது" என்று, ஒருதரம் சொல்லிவிடு, தாயி!

தாயி:—(உதறி) முடியாது. (போய்விடுகிறாள்).

போகி:—பிடிவாதமே, உன் பெயர்தான் 'பெண்'. பரிந்தும், வருந்தியும், வேண்டியும், பயமுறுத்தியும் ஒன்றும் பலிக்கவில்லை. அவளை உயிர்வதை செய்தால்கூட, அவள் சொல்லியிருக்கமாட்டாள் என்று நம்புகிறேன்.

மணவாளன்:—(சிரித்துக்கொண்டு உள்ளேவருகிறான்) தற்காலம் அவள் உயிருடன் இருக்கட்டும், போகி! அதைச் சொன்னாலும் சரி சொல்லாதுபோனாலும் சரி.

போகி:–(தலைசாய்ந்து, வெட்கி) ஐயா! எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தீர்களா?

மண:–(பிருதியாகச் சிரித்து உற்சாகத்துடன்) ஆம், உங்கள் சண்டையின் கொஞ்சபாகம் கேட்டேன். தாயி பிடிவாதக்காரிதான்.

போகி:–அப்படியில்லை. அவள் பொதுவாக நல்லவளே. சொன்ன படி கேட்பாள். இன்று என்னவேளையோ, அவளைச் "சைத்தான்" பிடித்ததுபோலும்.

மண:–பெண்கள் எந்த நிமிஷத்தில் எப்படி எப்படி யிருப்பார்கள் என்று யாரால் சொல்லமுடியும்? சரி, உள்ளேபோய், நல்ல "ஐஸ்கிரிம்" செய்துகொண்டுவா. என் மாமனுருக்கு அது தேவை. டிபின்வேளை யில் அதை விரும்புவார்.

போகி;–(ஒருபுறமாக) விட்டேனு அவளை. அதைச் சொல்லித் தான் தீரவேண்டும் அவள். (போகிறுன்)

மண:–ஏன் நாராயணி இன்னும் வரவில்லை? அப்போதே அலங் கரிக்கச்சென்றுளே. ஆ! அதோ வருகிறுள்.

---

## காட்சி II.

### (மணவாளனும் நாராயணியும்)

நாராயணி:–(இடதுபக்கமாக வந்து உட்காருகிறுள்) என் தாய் தந்தையர்கள் ஏன் இன்னும் வரவில்லை? என்ன தாமதமோ? அவர்கள் சீக்கிரமாகவே வருவார்கள் என்று நினைத்தேன்.

மண:–(நாராயணியின் முன்னிலையில் உட்கார்ந்துகொண்டு) அவர் கள் இங்கு இல்லாததைப்பற்றித் துக்கப்படுகிறுயா?

நாரா:–(சந்தேகப்பார்வையுடன் விழித்து) அதென்ன, அப்படிக் கேட்டீர்கள்?

மண:–ஆமாம், வாய்தவறிவிட்டது, (சிரிக்கிறுன், பின்னர் ஏதோ ஞாபகத்துக்கு வந்ததுபோல்) இல்லை, இங்கே ஒரு சமாசாரம். (சிரிக்கிறுன் மறுபடியும்)

நாரா:–என்ன? என்ன கேட்டீர்கள்? வேடிக்கையாயிருக்கும்போல் இருக்கிறதே, சொல்லுங்கள்.

மண:—நிரம்பவும் ஹாஸ்யமான சமாசாரம் ஒன்றை ஒட்டுக்கேட்டேன்.

நாரா:—ஒட்டுக்கேட்டீர்களா? உண்மையாகவா? கண்ணே!

மண:—(திரும்பவும் சிரித்து) அகஸ்மாத்தாக என் அறையிலிருந்து இவிடம் வரும்போது, இங்கே கடுத்த சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது; என் காதிற்கும் எட்டியது; சற்று வெளியிலேயே நின்று கேட்டேன். போகியும் தாயியும் மேஜை நாற்காலிகளைச் சுத்தஞ்செய்து முடித்தார்கள். போகி நிரம்பத் திருப்தியடைந்து "கடவுள்கிருபை வேலை முடிந்தது" என்று ஆஸ்வாஸப்படுத்திக்கொண்டு, தாயியையும் அந்த மாதிரி சொல்லச்சொன்னான். ஒருவேலைமுடிந்ததும் அந்தமாதிரி சொல்வது வழக்கந்தானே.

நாரா:—என்ன முட்டாள்தனம்!

மண:—தாயி சொல்லமாட்டேன் என்றாள். போகி கட்டாயப்படுத்தினான். அப்படியே சொல்போர் வளர்ந்தது. அவளைப் பலவந்தப்படுத்தியாவது சொல்லச்செய்ய முயற்சித்தான். அவளும் மாட்டேனென்று பிடிவாதம் சாதித்துவிட்டாள்.

நாரா:—(தாயி பக்கம் இரங்கி) சரிதான், யார் பிடிவாதமாக இருந்தார் என்பதுதான் தெரியவில்லை. தாயியா? அல்லது போகியா?

மண:—ஒருதரம் சொல் என்று போகி வேண்டிக்கொள்ளத்தானே செய்தான்.

நாரா:—அதைவிடக் கேவலமான வேண்டுகோள் கிடையாது.

மண:—ஒரு கபடமில்லாத அந்த வேண்டுகோளுக்கா இந்தப் பிடிவாதம்? இதை ஒருபொழுதும் ஒத்துக்கொள்ளமுடியாது.

நாரா:—(கொஞ்சம் உக்கிரமாய்) அந்தப் பிடிவாதவேண்டுகோளும் அப்படித்தான். தாயிதப்பு என்று நான் நினைக்கவில்லை.

மண:—(சிரித்துக்கொண்டு) அதைப்பற்றி நாம் ஏன் விவாதிக்க வேண்டும்? நம் இரண்டுபேருக்கும் அந்தமாதிரி ஒரு நாளும் ஏற்படாது என்று நம்புகிறேன்.

நாரா:—(சந்தேகத்துடன் அவனை உற்றுப்பார்க்கிறாள்).

மண:—நான் அந்தமாதிரி உன்னைச் சொல் என்று கேட்டால், நீ உடனே சொல்லமாட்டாயா?

நாரா:—உம்—க்—உம்—(புன்னகையுடன்)

மண:—(நிச்சய நோக்குடன்) நீ சொல்லிவிடுவாய் என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது.

நாரா:—நான் சொல்லமாட்டேன் என்றாலோ?

மண:—நீ சொல்லமாட்டேன் என்றாலோவா? அது ஒருநாளும் நடவாது. நான் பந்தயம்போடுகிறேன்.

நாரா:—பந்தயம் போடாதேயுங்கள்.

மண:—சரி, உடனே பரீக்ஷிக்கவேண்டியதுதான்.

நாரா:—(பரபரப்புடன்) பரீக்ஷை வேண்டாம், விட்டுவிடுங்கள்.

மண:—என் கண்ணே! ஒருதரம் சொல்லிவிடு. "கடவுள் கிருபை, வேலை முடிந்தது" உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன்.

நாரா:—வேண்டாம், சின்னத்தனமாயிருக்கிறீர்களே?

மண:—தயவு, தயவு, ஒருதரம் சொல்லிவிடு.

நாரா:—(மனந்தளர்ந்து) என்னே! உமது வேண்டுகோள்!!

மண:—பிரியசகியே! "கடவுள்கிருபை, வேலை முடிந்தது" என்று தயவுடன் ஒருதரம் சொல்லு.

நாரா:—நான்....அதைச்........சொல்லமாட்டேன்.

மண:—கொஞ்சம் தயவு, மறுபடியும் தயவு.

நாரா:—(மறுகி) முடியாது, முடியவே முடியாது.

மண:—(திகைத்து) ஒருதரம் சொல்லமாட்டாயா?

நாரா:—(தீவிரமாய்) மாட்டேன்.

மண:—(மெல்ல எழுந்து) என்னை இப்படியா மறுப்பாய்?

நாரா:—இப்படிக்கேட்பது சின்னத்தனமில்லையா?

மண:—(நின்று) சின்னத்தனமோ, இல்லையோ, அது விஷயமில்லை. என் வேண்டுகோளுக்கு நீ இணங்குவாயா இல்லையா, என்பது கேள்வி, பதில் சொல்லு.

நாரா:—நீங்கள் அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பது தப்பல்லவா?

மண:—ஒருவேளை அப்படியிருக்கலாம்; ஆனால் என் வேண்டுகோளை மறுப்பது பெரிய தவறு; என்னை அவமதிப்பதேயாகும்.

நாரா:—(எழுந்து, பரபரப்புடன், உறுதியுடன்) நான் தவறு இழைத்தலா? இப்படிப்பட்ட மொழியை இப்பொழுதுதான் முதல் தடவை என்னிடம் சொல்லுகிறீர்கள்! ஏனோ?

மண:—நீயும் என் வேண்டுகோளை முதல்முதலாக மறுக்கிறாய் இப்பொழுதுதான்?

நாரா:—இதுவே சின்னத்தனமாயும் சண்டித்தனமாயும் முதல் முதல் தங்களிடமிருந்துவரும் வேண்டுகோளாயிருக்கிறது.

மண:—சின்னத்தனம்! சண்டித்தனம்! இந்த மொழிகளா என் செவியில் விழுகின்றன! இவையோ அன்பின்வழி வரும் மொழிகள்!

நாரா:—அன்பு மதிகெட்டுக் கட்டளையிட்டாலோ?

மண:—கட்டளையா இட்டேன்? வேண்டிக்கொள்ள அன்றோ செய்தேன்.

நாரா:—அப்படியா? — கட்டளையிட்டால் —

மண:—அப்புறம் .... (சட்டென மௌனம்)

நாரா:—நீங்கள் சட்டளை யிட்டால் ....

மண:—(திகைப்புடன்) ஒருநாளும் மறுக்கமாட்டாய் அதை நீ.

நாரா:—(மனஉறுதியுடன்) அப்படியா, ஆனால் அப்பொழுதும் மறுக்கிறேன்.

மண:—என்ன? என்ன?

நாரா:—ஓகோ, என்னை ஏவுவீர்களாக்கும்! அப்படி என்னை அவமானப்படுத்துவீர்களாக்கும்! ஒருவேளை, உங்கள் வேண்டுகோளுக்கு இணங்கலாம்; உங்கள் கட்டளைக்கு, மறுக்கவேசெய்வேன்; (மணியைத் தட்டுகிறாள்.)

மண:—ஆகா, இவ்வளவு கொடுமையாகவா என்னிடம் நடந்து கொள்ளுகிறாய்? ஈசனே! இதுவோ ஒரு மனைவி தன் மணாளனுக்குக் காட்டும் நடத்தை!! சம்பாஷிக்கும் ரீதி!!

நாரா:—இப்படியும் மணாளர்கள் விவேகம் கெட்டுத் தம்மனைவிகளுடன் நடந்துகொள்வார்களா? தப்புவேண்டுகோள்களைக் கேட்பார்களா?

---

## காட்சி III.

(முந்திய அறை — தாயி வருகிறாள், பின்னர் போகி வருகிறான்)

நாரா:—(உள்ளே நுழையும் தாயியைப்பார்த்து) தாயி, என் கைக்குட்டையை அங்கு வைத்து மறந்துவந்துவிட்டேன்.

தாயி:–(வெளியே போகிருள்.)

மண:–சகி, விளையாட்டாகப் பேசிவந்தேன். அதை வினையாயாக்கி விடாதே.

நாரா:–நாளு வினையாக்குகிறேன்? நீங்கள் அல்லவோ அப்படிச் செய்கிறீர்கள்.

போகி:–(ஒரு கோப்பை காப்பியை ஒரு மேஜையின்மேல் வைக்கிருன்.)

தாயி:–(கைக்குட்டையை நாராயணியிடம் கொடுத்துவிட்டு நகருகிருள்.)

போகி:–(வழிமறித்து, ஜாடையாய் "சொல்லிவிடு" என்று கேட்கிருன்).

தாயி:–(ஜாடையாய் "மாட்டவேமாட்டேன்" என்று பதில்ஜாடை காட்டி வெளியேபோகிருள்.)

போகி:–(பயமுறுத்திக்கொண்டு அவளைப் பின்தொடர்ந்து போகிருன்.)

நாரா:–(மணவாளனினின்றும் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு ஏதோ துணிதைக்கிருள்)

மண:–(எழுந்து, ஒரு பத்திரிகையைப் படிக்கிருன். போகியும் தாயியும் சென்றபிற்பாடு பத்திரிகை மறைவாக நாராயணியைப் பார்க்கிருன். அவள் முகமாறுபாடாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, பத்திரிகையைத் தூர எறிந்துவிட்டு, மெல்ல அவளைப்பார்த்து) என்ன? போஜனைமுடிந்ததா? உன் பிடிவாதத்தை இப்பொழுதாவது களைவாயா?

நாரா:–(துணியைத் தூர எறிந்துவிட்டு, கோபமாய்) என்ன? பிடிவாதமா? என்னல் சகிக்கமுடியவில்லையே. அது உங்களுக்குத் தெரியாதா? என்னிடம் முரண்டே கிடையாது இந்த விஷயத்தில் நீங்கள்தான் ஒரேபிடிவாதமாய் இந்த அசட்டுக்கேள்வியைக் கேட்டு, என்னைத் துன்பப்படுத்துகிறீர்கள்!

மண:–சரிதான், சகி, இந்த அசட்டுத்தனமெல்லாம் இருக்கட்டும். என்வேண்டுகோளை நீ மறுக்கப்படாது என்றுதானே நான் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாரா:–தயவுசெய்து இந்தவிஷயத்தை முறித்துவிட்டு வேறு எதையாவது சொல்லுங்கள்.

மண:—என்னவோ, நான் முதலிற் கேட்டுவிட்டேன் எனது வேண்டுகோளே முதலாவதாயிற்று. நீ அதை மறுப்பாய் என்று நான் நினைக்கவேயில்லை. அதை நினைக்கவே என்மனம் நடுங்குகிறது.

நாரா:—அப்படியா? நீங்கள் சொல்வதற்கெல்லாம், நான சரி, சரி, என்று சொல்லிவிடவேண்டும்; மறுக்கக்கூடாதல்லவா? சரிதான், நீங்களும் பிறமனிதர்களைப்போல்தான் இருக்கிறீர்கள். சமஉரிமைகளுடன் கூடிய ஒரு அன்பிறசிறந்த சகி உங்களுக்குவேண்டியதில்லைபோலும். உங்களதுமனைவியை ஒரு அடிமையாகவே இருக்கக்கோருகிறீர்கள்.

மண:—என்ன அதிசயோக்தி! இவ்வளவு பெரியதாக்கிவிட்டாயே இந்தச் சிறுவிஷயத்தை.

நாரா:—அப்படியில்லை. அடிமைக்கு அடிப்படி அதுவே. குருட்டுத்தனமாய்க் கீழ்ப்படிதலே வேண்டுதல் அடிமைக்கு அடிகோலிபதாகும். நான் அதற்கு இசையமாட்டேன்; ஒருபொழுதும் இசையேன். எனது கடைசிச்சுவாசம் இருக்குமளவும் நான் என் உரிமையை விவாதித்து அநுபவிப்பேன. பயமுறுத்தினும் அஞ்சேன; தடித்தனமாய் அடித்தாலும் அசையேன்.

மண:—(தாழ்ந்த தூலில்) "அவன் உனது எஜமானனாகக்கடவன" என்றதே சாஸ்திரமும்!

நாரா:—நான் சொன்னதை ருசுப்படுத்திவிட்டீர்களே. நானல்லவோ சரி. நீங்கள் எஜமானன; நான் ஒரு அடிமை; நீங்கள் ஏவுவீர்கள்; நான் கீழ்ப்படிந்து நடப்பேன். பேஷ். நீங்கள் ஏவுவது யுக்திக்கு அநுசரணையாயிருந்தால் அதை ஆமோதிப்பேன்; கீழ்ப்படியவும் செய்வேன; ஆனல் உங்கள் கட்டளைகள் யுக்திக்கு விரோதமாயிருந்தால், அதன்படி ஒருபொழுதும் நடவேன்.

மண:—இந்தமாதிரியாகவா ஒருவரைபொருவர் நேசிப்பவர்கள் பேசிக் கொள்வது?

நாரா:—இந்தமாதிரியாகவா ஒருவரைபொருவர் நேசிப்பவர்கள் கட்டளையிடுவது?

மண:—விளையாட்டாகக்கூட........

நாரா:—ஐயோ! இதென்ன கொடுமை! விளையாட்டு, வெறுக்கும்படியான நிஜமாய்விட்டதே. (அழுகிறாள்) கொஞ்சகாலத்துக்குமுன்பு தானே 'உன் மனம்கோணாமல் நடப்பேன்" என்று சொன்னீர்கள்; இவ

வளவு சீக்கிரத்தில் தனது மனைவியை அடிமை என மதிக்கும் ஒரு பற்றற்ற, உணர்ச்சியற்ற மணாளன்மாதிரி என் முன்பு வாதாடுகிறீர்களே!! நான் என் செய்ய!!

மண:-(மனவருத்தத்துடன்) கண்ணே! அழாதே! கண்ணீர்பார்க்க நான் சகிக்கமாட்டேன். உனக்குத்தெரியாதா?

நாரா:-(விம்மிக்கொண்டு) நீங்கள்தானே என் கண்ணீரைப் பெருக்குகிறீர்கள். நான் எப்படி அதை அடக்குவது?

மண:-(பரிகாசமாய்) அடே, அதற்குள் நான் அவ்வளவு கொடுமைக்காரனாய்விட்டேனே! நான் கண்ணீரைப் பெருகச் செய்கிறதா? என்ன சக்தி; இப்படிப்பட்ட புருஷனை நீ மணக்கும்படி ஏற்பட்டதே! என்ன சொல்வது?

நாரா:-அதுதான் சரி. கொடுமையுடன் கொஞ்சம் பரிகாசத்தையும் சேருங்கள். இரண்டுநாழிகைக்குமுன் யார் என்னிடம் இந்தமாதிரி பேசியிருப்பார்கள்? காலவித்தியாசம். பொழுதும் நன்றாக விடிந்தது; நானும் உற்சாகமாகத்தானிருந்தேன்; இப்பொழுது வந்தது—

மண:-இதெல்லாம் எதற்கு? "என்னைவிட அதிர்ஷ்டங்கெட்ட பெண் உலகத்திலேயே கிடையாது" என்று சொல்லேன்.

நாரா:-(மீண்டும் அழுகிறாள்—பேசவில்லை.)

மண:-(ஒருபுறமாக) இதென்ன அழுகை! எரிச்சலாயிருக்கிறது. இப்பொழுது அவள் பெற்றோர்கள்வந்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? (தன்மனதை அடக்கிக்கொண்டு) நாராயணி, கண்ணே, என் அருமைக்காதலியே-விடு-நாம் மீண்டும் நேசமாயிருப்போம். இப்படி வா.

நாரா:-(கண்ணிலிருந்த கைக்குட்டையை எடுத்துவிட்டு அவனை உற்றுநோக்கி) நேசமா? அழகு!!

மண:-சீ! நாம் இப்படிச் சண்டையிடுவது அழகல்ல. இன்றைப் பொழுது இப்படிச் செல்லக்கூடாது.

நாரா:-இப்பொழுதாவது மனம் தெளிந்ததா?

மண:-நாமிருவரும் இப்படிச் சண்டையிடுவதற்குக் கொஞ்சங்கூடக் காரணமில்லை.

நாரா:-(சிறிது இகழ்ச்சியுடன்) அப்படியிருந்தும் எனக்கு இந்த அபவாதம் கட்டினீர்களே!

மண:–இதோ பார். இரண்டுபேருக்கும் பாதிவழி–திரும்பச்சினேக மாயிருப்பதற்காக என் கையை உனக்குத் தருகிறேன். (அவளிடம் போய்த் தன் கையால் அவள்கையைப் பிடிக்கிறான்).

நாரா:–(அன்புடன் அவனை நோக்கித் தன்கையை மெல்ல அவன் கையில் சேர்க்கிறாள்). இப்படிப் புண்படுத்தாதேயுங்கள்! துஷ்டத்தன மாய்!

மண:–(இரக்கத்துடன்) நமது அன்னியோன்யத்தை உத்தேசித் தாவது அந்த வார்த்தைகளை ஒருதரம் சொல்லமாட்டாயா?

நாரா:–(தன்கையை உதறி, நீக்கி) இன்னுமா? என்ன?

மண:–நீ சொல்லமாட்டாயா?

நாரா:–என்னசொல்லுகிறீர்கள்?

மண:–நான் பாதிவழி இறங்கிவிட்டேனே; என்கையைநீட்டிச் சலுகைசெய்துகேட்கிறேன். நீயும் பாதிவழி இறங்கவேண்டாமா? உனது பங்கு எங்கே?

நாரா:–(மனக்கிலேசத்துடன்) கட்டாயப்படுத்துகிறீர்களா? மறு படியும் சண்டைக்கு ஆரம்பம்செய்கிறீர்களா?

மண:–சண்டையைமுடித்துவிடு, வார்த்தைகளை ஒருதரம் சொல்லி விட்டு. எனக்கும் திருப்தியாகஇருக்கும்.

நாரா:–(சிறிது நிதானித்து) மாட்டேன், மறுபடியும் மாட்டேன்.

மண:–(அடங்கிய கோபக்குறியுடன்) மாட்டாயா?

நாரா:–(உறுதியுடன்) மா....ட்....டே....ன்.

மண:–(கோபமூண்டு தானே பேசுகிறான்) நல்லது, மிகவும் நல்லது தான்; என்னைத்திருப்திசெய்யக்கூடும் என்பது உனக்குத் தெரியும்; அப்படியிருந்தும் திருப்திசெய்யமாட்டாய், நல்லது! எனதுவிருப்பம் அயுக்தமாயிருக்கலாம்; இருந்தாலும் அது எனது விருப்பமல்லவா? அதை நிறைவேற்றவேண்டாமா நீ? நான் ஒன்றைக்கேட்டதில்பிடிவாதமா யிருக்கலாம், இருந்தாலும் நீ அதற்கு இணங்கிப் படிந்து, நிறைவேற்ற வேண்டாமா? அப்படிச்செய்ய மறுக்கிறாய். நீ பிதற்றிய சொற்களை

நான் பொருட்டாக்கவில்லை; என்மேலுள்ள அன்பின்மிகுதிக்கு அப் பேதமைச் சொற்கள் ஒரு சான்றாகும். அச்சான்றை மிக மகிழ்ச்சியுடன் பாராட்டுவேன். உன்னை வேண்டினேன், கெஞ்சினேன்; ஏவினேன்; எல்லாவழிகளையும் அனுசரித்தேன். நீ ஒன்றுக்கும் வசமாகவில்லை. ஒரே பிடிவாதம் சாதிக்கிறாய், இதுவோ உனது காதல்! மூரண்டைத் துறந்து கணவனைச் சந்தோஷிக்கச்செய்யத் தெரியாதவளா மனைவி? என்னைவிட்டு ஓடிப்போ. என்னை நேசிக்கிறேன் என்று என்காதுகேட்க இனிச் சொல்லாதே. (பிரிந்து மனவிகாரமுற்று நகருகிறான்.)

நாரா:—(மேஜையில் சார்ந்தவண்ணம்) என்னையா மூரண்டு என்று இகழ்கிறீர்கள்? என்ன உரிமை உங்களுக்கு? நீங்களே அருத்தமற்ற அந்த வார்த்தைகளை நான் சொல்லவேண்டுமென்பது அயுக்தமானது தான் என்று சொல்லிவிட்டு, அந்த அயுக்தமானதைச் சொல்லும்படி வற்புறுத்துகிறீர்கள். மனமறிந்து ஒரு மூடத்தனத்தைச் செய்வது இழிவல்லவா? இருந்தும் அந்த இழிவை நான் அடையவேண்டு மென்று தீவிரமாய் மன்றாடுகிறீர்கள். அதுவோ அன்பு! உங்களது வேண்டுகோள் என் மனதுக்குப் பிடிக்கவில்லை என்று உங்களுக்குத் தெரியும்; (கொஞ்சம் சாந்தமடைந்து பின் அழ ஆரம்பிக்கிறாள்) உங்கள் வேண்டுகோள் யுக்தமற்றதென்றும் தெரியும். தெரிந்தும் என்ன? சொன்னதையே சொல்கிறீர்கள்; உங்கள் மனதும் திருந்தியபாடில்லை. உங்களது கொடுமைச் செயல் எனது கண்ணீரை வெளிப்படுத்திப் பெருக்குகிறது, ஆயினும் உங்களது கல்நெஞ்சம் உருகினபாடில்லை. உங்களது வேண்டுகோளுக்கு இணங்க ஒரு அணுஅளவும் எனக்கு விருப்பமில்லை; நீங்களும் உங்களது விருப்பத்தை விடாது வற்புறுத்து கிறீர்கள். எங்கோ மூரண்டு உளது? யாவர் பக்கமோ அம்மூரண்டு விகசிக்கிறது? எவரிடமோ அன்பின்குறைவு தெளிவுறவிளங்குவது?

[தொடரும்.]

ஸ்ரீ:

# மதிப்புரை.

1. தமிழ்க்கடல் வெளியீடு I, II புத்தகங்கள்:—

தமிழ்நூற்பரப்பனைத்தும் ஒரேயளவுப் புத்தகங்களாக ஒரேயிடத்தில் விலைக்குக் கிடைப்பது யாவரும் விரும்பி ஏற்கத்தக்கதாகும். ஆகையால் 'தமிழ்க்கடல்' என்ற பெயரால் அவற்றை முறையாக அச்சிட எண்ணி, சென்னை, திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள் இது பொழுது இரண்டு பதிப்புக்களை வெளியிட்டிருக்கின்றனர்.

இத்தகைய வெளியீடுகள் நூல்நிலையப்பதிப்பு (Library Edition) என்னும் பெயரோடு, நாட்டுமொழிவளர்ச்சிக்கு உற்றதுணையாக மேற்றிசைவாணராற் போற்றப்படுவனவாம். ஆகலின் நமது நாட்டினும் இவை சிறந்த பயனளிக்குமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. முதலியாரவர்களின் இப்பேருதவிக்குத் தமிழுலகம் அவரிடம் மிக்க நன்றியறிதலுடைத்து.

தமிழ்க்கடலின் முதற்புத்தகத்தில், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய இரண்டும் பழையவுரைகளோடும், பாடபேதங்களோடும், ஆசிரியரின் அரிய பல குறிப்புக்களு முடையனவாய்த் திருத்தமுறப் பதிக்கப்பெற்றுள்ளன. இரண்டாம்புத்தகத்திலும் வெற்றிவேற்கை, உலகநீதி, நீதிவெண்பா ஆகிய மூன்றும் அங்ஙனம் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றில் ஒவ்வொன்றும் 250 பக்கங்களுடையன.

இவ்விரண்டுபுத்தகங்களும் கண்ணைக்கவரும்வண்ணம் அழகு வாய்ப்ப அமைந்திருத்தலை நோக்க, இவற்றிற்கு விலை தனித்தனி ரூபா ஒன்றாக விதித்திருப்பது மிகவும் குறைந்ததென்றே சொல்லலாம். மேலுள்ளனவும் மாதம் ஒவ்வொன்றாக வெளிவரும் என்றும், ரூபா ஒன்று முன்பணம் செலுத்திப் பதிவுசெய்துகொள்பவர்க்குப் புத்தகங்கள் முக்கால்விலைக்குக் கொடுபடுமென்றும் அறிக்கை தெரிக்கின்றது.

இந் நன்முயற்சி பொருட்குறைவாற் றடைப்படாவாறு ஆதாவளித்தல் துரைத்தனத்தார்க்கும் பிறர்க்கும் உரிய கடமையாகும். புத்தகங்கள் வேண்டுவோர் 'மானேஜர், தமிழ்க்கடலாபீஸ், சாந்தோம், சென்னை' என்ற விலாசத்திற் பெறலாம்.

2. அமெரிக்காவில் மதுவிலக்கு:—இப்பெயர் கொண்ட புஸ்தகம், மதுரை, ஸ்ரீமான் E. S. சுந்தா, B.A., B.L., அவர்களால், ஆங்கில நூல்

களைத் தழுவி எழுதப்பெற்றது. அமெரிக்கா தேசத்தில் மதுவிலக்கு இயக்கம் தோன்றிய முறையும், பெண்பாலர் அதிற் பெரிதும் உழைத்த செய்தியும், அதனால் அத்தேசத்திற் கெய்திய அரும் பெரு நலன்களும் ஆகியவற்றை எல்லோரும் எளிதிலுணர இஃது இனிய நடையில் எடுத்துரைக்கின்றது. ஆசிரியாவர்களின் இவ் அரிய முயற்சி நம் நாட்டிற்குக் காலத்தாற் செய்த ஒரு பேருதவியாகவே கருதத்தகும்.

இத்தன்மையால் இதனைப் போற்றி, அரசாங்கத்திற் பெரும்பதவி வகிக்கும் ஆன்றோர்களும் இதற்கு நன்மதிப்புரை வழங்கியுள்ளார்கள். தமிழ்மாகாண காங்கிரஸ் மகாசபை கிளைச்சபைகளும், தாலூகா, ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களும், மற்றுள்ள பொது ஸ்தாபனங்களும், இது போன்ற புத்தகங்கள் நாடெங்கும் பரவுமாறு துணைசெய்ய வேண்டும். விலை அணா 8. விலாசம்:—ஸ்ரீமாந் E. S. சுந்தா அவர்கள், B A., B.L., "கல்யாணலீலா" குட்ஷெட் தெரு, மதுரை.

3. பிரசோற்பத்தி வருஷ வாக்கிய பஞ்சாங்கம்:—இது யாழ்ப்பாணம் 'சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கம்' என்னும் பெயருடையதாய், சோ. வைத்தியநாதசாஸ்திரிகளால் கணிக்கப்பட்டது. இதில் விரதங்களும், சிரார்த்த திதிகளும் மற்றும் ஸர்வ முகூர்த்தங்களும் சாஸ்திரமுறைப்படி நிர்ணயிக்கப்பட்டு அவ்வவற்றிற்குரிய நாழிகை விநாடிகளுக்கேற்ற மணி நிமிஷங்களுடன் சுத்தமாகவும் தெளிவாகவும் அச்சிடப்பட்டுள்ளன. இவையேயன்றிப் பலவகையான சோதிடக் குறிப்புகளும் இதில் அடங்கியுள்ளன. 90 பக்கங்கள்கொண்ட இப் பஞ்சாங்கத்தின் விலை அணா 4. விலாசம்:— ச. சோமசுந்தர ஐயர், கலாநிதிபிரஸ், பருத்தித்துறை, இலங்கை.

4. ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்:— இது கணித சாஸ்திரத்தில் B.A. பட்டம் பெற்ற ஸ்ரீமான் C. G. ராஜன் அவர்களால் கணிக்கப்பெற்றது. இதில் தேசாந்தர சம்ஸ்காரமும், நவக்கிரக நிரயன சுத்தஸ்புடமும் அடங்கியுள்ளன. சோதிடர்களுக்கு கிரகஸ்புடம் செய்வதில் இது உபயோகமுடையது. மற்றும் பஞ்சாங்கங்களிற் காணுதற்குரிய எத்தனையோ பல விஷயங்கள் இதில் விவரமாக எழுதப்பட்டிருக்கின்றன. விலை அணா 2. விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ், நெ 6, லாயர் சின்னத்தம்பிமுதலிதெரு, சென்னை.